வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 04.07.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 208 | பக்கங்கள் : 16






## எரிவாயு விலை மேலும் குறையும்

கொழும்பு, ஜூலை

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை குறைக்க லிற்றோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் புதிய விலை ரூ. 3,000 ஆக நிர்ணயிக்கப்படும் என்று அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட எரிவாயு விலை திருத்தத்தில் நான்காவது விலை குறைப்பு இதுவாகும்.

ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதி லிற்றோ நிறுவனம் விலை சூத்திரத்துக்கு அமைய எரிவாயு விலையை திருத்தம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மே 09 அன்று பாதிக்கப்பட்டோருக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை!

## அரசாங்கம் என்ற ரீதியில் வெட்கமடைகின்றோம்!

### அமைச்சர் பந்துல சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 04

**மே 09 சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்காமல் இருப்பதையிட்டு அரசாங்கம் என்ற ரீதியில் வெட்கமடைகிறோம் என்றுபோக்குவரத்து, ஊடகத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கெஸ்பேவ பகுதியில் நடந்த பெரமுன கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் வாழ்க்கையில் பல சவால்களை கடந்துள்ளோம். கோவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகித்தவர்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயல்பாடுகளில் முன்னின்று செயல்பட்டார்கள்.

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றினார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. குறுகிய 15



## தையிட்டி விகாரைக்கு எதிரான 4ஆம் கட்ட போராட்டம் நிறைவு!

யாழ்ப்பாணம், ஜூலை 04

தையிட்டியில் தனியாரின் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டம் நடத்தினர். நான்காம் கட்டமாக இரு நாட்கள் தொடர்ந்த போராட்டம் நேற்று நிறைவடைந்தது.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறும் அதனைச் சுற்றியுள்ள தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பௌர்ணமி தினமான நேற்று விகாரையில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. இந்த 15

## கொழும்பு துறைமுக நகரில் 120 கோடி முதலிடுகிறது சீனா!

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 04

சீனா ஹாபர் கோப்ரேஷனின் தலைவருடனான சந்திப்பின் போது கொழும்பு துறைமுக நகரத்தில் 120 கோடி டொலர் முதலீடு செய்ய விருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், சீனாவின் சினோபெக் நிறுவனம் புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிக்கத் தயாராக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாள் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முதலீட்டுக்குச் சாதகமான சூழலை உருவாக்கிக்கொடுக்கும் வகையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் பட்சத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள 15

### வவுனியா சீனி தொழிற்சாலை:

## மக்கள் வேண்டாமெனில் திருப்பி அனுப்புகிறோம்!

### ரெலோ தலைவர் செல்வம்

வவுனியா, ஜூலை 04

சீனித் தொழிற்சாலை தொடர்பில் யாரும் கஷ்டப்பட வேண்டாம். வவுனியா மக்கள் வேண்டாம் என்றால் திருப்பி அனுப்புகிறோம் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழீழ விடுதலை இயக்கம் சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்கமாட்டோம். இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் கூறி 15

## கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை சம்பந்தன், நான், மைத்திரியே ஏற்றோம்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 04

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியிருந்தேன். ஒன்றிணைந்து செயல்பட அவர் 2022இல் விடுத்த அழைப்பை நானும் சம்பந்தனும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவுமே ஏற்றோம்.

- இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன்,

போலியான தர்க்கங்களை முன்வைத்து தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு மாறாக நாட்டு மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கட்சிகளுக்கு அழைப்பும் விடுத்தார்.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அரசியலுக்கு வந்து 32 ஆண்டுகள் நிறைவையொட்டி அம்பாந்தோட்டையில் நடந்த நிகழ்வில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மகிந்த அமரவீர, மக்களுக்கு சிறப்பான சேவைகள் பலவற்றை செய்துள்ளார். இவர் ஆளும் மற்றும் எதிர்கட்சி அரசியல் களம் தொடர்பிலான அனுபவங்கள் நிறைந்தவர் என்ற வகையில் முன்னாள் 15

## தேர்தல் ஆணைக்குழுவுக்கே நாங்கள் செல்லவில்லை!

### ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி

வவுனியா, ஜூலை 04

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின், ஜனநாயகம் என்ற சொல்லை நீக்கி தமிழ் தேசிய கூட்டணி என மாத்திரம் செயல்படவும் அதனை ஆங்கிலத்தில் ரி. என். ஏ. என அழைப்பதற்கும் விடுத்த கோரிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரித்துள்ளதாக வெளியாகும் செய்தி உண்மைக்கு புறம்பானது என்று ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் யாப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் தற்போது நடைபெறுகின்றன. இந்த செயல்பாடுகள் நிறைவடைந்ததன் 15











வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினை நாகபூஷணி அம்மன் தீர்த்தத் திருவிழா நேற்று நடைபெற்றது. தீர்த்தம் ஆடுவதற்காக பக்தர்கள் புடைசூழ அம்மன் உள்ளிட்ட பரிவாரமூர்த்திகள் புறப்பட்டுச் செல்வதையும் தீர்த்தமாடுவதையும் படங்களில் காணலாம்.

# பேராதனை பல்கலைக்கழகத்தை 2 இலட்சம் பேர் பார்வையிட்டனர்



கொழும்பு, ஜூலை 04

பேராதனை பல்கலைக்கழகத்தை பார்வையிடுவதற்கு பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட தினத்தன்று சுமார் 2 இலட்சம் மக்கள் அங்கு சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம். டி. லமாவங்ச இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் 80ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி அதனை பார்வையிடுவதற்கு பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸ் மா அதிபர் பதவி 9 நாட்களாக வெற்றிடம்!

கொழும்பு, ஜூலை 04

பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவின் பதவிக் காலம் முடிவடைந்து நேற்றுடன் 9 நாட்கள் கடந்தன. எனினும், புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படாதமையால் பொலிஸாரின் நிர்வாகப் பணிகள் செயலிழந்துள்ளன என்று பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரின் அலுவல்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கும் உத்தரவு வழங்குவதற்கும் அனுமதி வழங்குவதற்கும் ஒன்பது நாட்களாக பொலிஸ் மா அதிபர் இல்லாதமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கான மூன்று பெயர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சில தினங்களில் அரசமைப்பு பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம்) நிலந்த ஜயவர்தன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (வட மேற்கு) லலித் பத்திநாயக்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (மேற்கு மாகாணம்) தேஷபந்து தென்னகோன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (குற்றம்) பிரியந்த வீரசூரிய மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (சப்ரகமுவ) பி.பி.எஸ்.எம்.தர்மரத்ன மூப்புப் பட்டியலின்படி முன்னிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாமலிருக்க நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஜூலை 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுரைக்கு அமைய நாட்டுக்குள் மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு தற்போது முன்னெடுத்து வருகின்றது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மருந்துப் பொருட்களின் பெறுகை செயல்பாடுகளை செயல்திறன்மிக்கதாக முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய மருந்து பொருட்களின் தரம் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானம் செலுத்த தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

"ஸ்திரமான நாட்டுக்கு அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் மருத்துவத் துறை பற்றிய அவதானம் தற்காலத்தில் மேம்பட்டுக் காணப்படுகிறது. உலகளாவிய ரீதியிலும்- பிராந்திய ரீதியிலும் இலங்கையின் மருத்துவத் துறைக்கான அர்ப்பணிப்புக்களுக்கு பாராட்டு கிடைத்துள்ளது.

தற்போது நாட்டில் காணப்படும் மருத்துவத்துறை தொடர்பிலான பிரச்னைகளுக்கான தீர்வுகள் மற்றும் அந்தத் தீர்வுகள் இலவச மருத்துவத்துறையின் எதிர்காலத்தில் எவ்வகையில் தாக்கம் செலுத்தும் என்பது பற்றியும் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. 19 புதிய மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. அடுத்த காலண்டில் இன்னும் 17 மருந்துகளின் உற்பத்தி செயல்பாடுகள் ஆரம்பிக்கப்படும். அதன் பின்னரான இரு வருடங்களில் 30 - 35 சதவீதம் வரையிலான மருந்துப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்திசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது - என்றார்.

# பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்!

## அமைச்சர் ஜீவன் எச்சரிக்கை

கண்டி, ஜூலை 04

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் வகையிலும், அவர்களுக்கான தொழில் உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கும் வகையிலும் செயல்படும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்.

ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை மாத்திரம் சுரண்டிக்கொண்டிருக்கும் தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க போவதாகவும், தீர்வை வழங்காவிட்டால் ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், தொழிலாளர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என தோட்ட நிறுவன தரப்பில் அமைச்சருக்கு உறுதியளிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
04.07.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது யாருக்கான சேவை?

ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தன. மீண்டும் நினைவூட்டலாகவும் – அதேவேளை, இந்தியாவின் தலையீட்டை கோரியும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடிதமொன்றை அனுப்பவுள்ளனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் இந்தியா 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தக்கூடாதென்று இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதவுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தெரிவித்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாதம் புதுடில்லிக்கு செல்லவுள்ள நிலையில் இவ்வாறானதொரு கடிதத்தை இந்தியாவுக்கு அனுப்ப முற்படுவது யாருக்கு நன்மையளிக் கும்?

இந்தியாவின் தலையீடானது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலானது. இந்த பின்புலத்தில்தான் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்ல வேண்டிய தேவை இருக்கின்றதென்று இராஜதந்திர மொழியில் சுட்டிக் காட்டுவது என்பது வேறு – இந்தியா இந்த விடயத்தை வலியுறுத்தக் கூடாதென்று எச்சரிக்கும் தொனியில் குறிப்பிடுவதென்பது வேறு.

உண்மையில் இதுதான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடென்றால் – தங்களின் நிலைப்பாட்டை இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு. ஜெய்சங்கரிடம் தெரிவித்திருக்கலாம். ஏனெனில், இறுதியாக இடம்பெற்ற சந்திப்பின்போது வழமைக்கு மாறாக கஜேந்திரகுமாரும் அழைக்கப்பட்டிருந்தார். இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய கட்சிகள் – கடிதம் எழுதாத காங்கிரஸ் கட்சி அனைத்துக்குமான பதிலாகவே ஜெய் சங்கர் இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். இந்த சந்தர்ப்பத்திலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தங்களின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கலாம். அத்துடன், இந்தியா இனியும் 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தக் கூடாதென்று நேரடியாகவே கூறியிருக்கலாம். அப்போது, அமைதியாக இருந்துவிட்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதன்முதலாக புதுடில்லி செல்லவுள்ள நிலையில் இவ்வாறானதொரு கடிதத்தை எதற்காக அனுப்ப வேண்டும்?

இவ்வாறானதொரு பின்புலத்தில், இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தக்கூடாதென்று கூறுவதானது பிறிதொரு வகையில் இந்தியாவின் தலையீட்டை மறைமுகமாக எதிர்ப்பதுதான். இதனையே தென்னிலங்கையிலுள்ள சிங்கள – பௌத்த தேசியவாத தரப்புகளும் கூறிவருகின்றன. 13ஆவது திருத்தச் சட்டமானது தங்களின் குரல் வளையை நெரித்து கொண்டுவரப்பட்டதாகும் அதனை இந்தியா வலிறுத்த முடியாது. இவ்வாறானதொரு குரல் வேறு விதமாக தமிழர் பக்கத்திலிருந்தும் வெளிப்படுத்தப்படுகின்றது.

மிலிந்த மொறகொட இந்தியாவுக்கான தூதுவர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்புலத்தில், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒரு மூலோபாய அறிக்கையொன்றை வழங்கியிருந்தார். அந்த அறிக்கையிலும் இலங்கையின் அரசியல் விவகாரம் உள் விவகாரமாகும் – அதில் வெளியாரின் தலையீடுகள் தேவையற்றவை – என்றவாறு குறிப்பிட்டிருந்தார். இந்தியா 13ஆவது திருத்தத்தை வலியுறுத்தக் கூடாதென்று குறிப்பிடுவதானது இந்த விடயத்தில் வெளியாரின் தலையீடுகள் தேவையற்றவை என்னும் பொருள் கொண்டதுதான். தமிழர் பக்கத்திலிருந்து இவ்வாறானதோர் அணுகுமுறை வெளிவருவதானது – அதிலும் குறிப்பாக, ரணில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை முதன் முதலாக சந்திக்கும்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறான தொரு கடிதத்தை அனுப்புவதானது ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிச்சயம் மகிழ்ச்சியான செய்தியாகவே அமையும்.

# கூட்டுறவு இயக்கம் தனித்து நிற்கும் திறன் கொண்டது!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 04

கூட்டுறவு இயக்கம் 100 வருடங்களுக்கு முன்னர் பல்வேறு துறைகளில் தோற்றுவிக்கப்பட்டது. கூட்டுறவு என்பது தனித்து நிற்கும் திறன் கொண்டது என நம்புவதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.



தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் திருத்தப்படவேண்டும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர், காலாவதியான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கடைப்பிடிப்பதன் காரணமாக ஏற்படும் குறைபாடுகள் கூட்டுறவு இயக்கத்தின் உயிர்வாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

பரஸ்பர பகிர்வு, விநியோகம், வரலாற்றுத் தன்னிறைவு பெற்ற கிராமக் கருத்தைப் பாதுகாத்தல் போன்ற ஒவ்வொரு பணியிலும் கூட்டுறவு இயக்கத்தின் தற்போதைய கொள்கைகள் மேலோங்கி இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

கூட்டுறவு இயக்கம் 100 வருடங்களுக்கு முன்னர் பல்வேறு துறைகளில் தோற்றுவிக்கப்பட்டது. கூட்டுறவு என்பது தனித்து நிற்கும் திறன் கொண்டது என நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

எனவே, விதிகள் மற்றும் விதிமுறைகள் மேலும் தளர்த்தப்பட்டு, இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல கூட்டுறவுத் தலைமையை அனுமதிக்க வேண்டும் எனவும் பிரதமர் கூறினார். (ஐ)

# தனியார் மருத்துவ நிறுவனங்களை செப். 15இற்குள் பதிவதற்கு உத்தரவு

கொழும்பு, ஜூலை 04

பதிவு செய்யப்படாத அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன் சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒழுங்குமுறை சபை அறிவித்துள்ளது.

2006ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவு சட்ட விதிகளின்படி, இலங்கையில் உள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவித்து உரிய பதிவை மேற்கொள்ளலாம். இவ்வாறு பதிவு செய்யாத அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராகவும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் ஒழுங்குமுறை சபை தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் பதிவு செய்யப்படாத சுமார் ஆயிரத்து 500 தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை 50 ஆயிரத்தை நெருங்குகின்றது

கொழும்பு, ஜூலை 04

2023ஆம் ஆண்டில் இது வரை நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.


2023ஆம் ஆண்டில் இது வரை நாட்டில் 49 ஆயிரத்து 759 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.



கடந்த வார நிலவரப்படி டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது. டெங்கு நோயாளர்களின் மேல் மாகாணத்தில் இருந்து 24 ஆயிரத்து 837 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், ஜூன் மாதத்தில் கிட்டத்தட்ட 10,000 டெங்கு நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர். 61 பிரதேசங்களை டெங்கு அபாய வலயங்களாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். பெரியோர் உதவுவார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வழியில் உங்களுக்கு நல்ல செய்தி வரும்.

**கடகம்**
எதிர்பாராத தனவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றி நல்லவர்கள், கெட்டவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் சில முக்கிய ஆலோசனைகள் தருவீர்கள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பயணங்கள் திருப்திகரமாக அமையும். கலைப்பொருட்கள் வாங்குவீர்கள். வாய்ப்புகள் தேடி வரும்.

**துலாம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பயணங்கள் சிறப்பாக அமையும்.உற்சாகமான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சில வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென்று நினைப்பீர்கள்.

**மகரம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். உடல் நிலை பாதிக்கும். எதிலும் நிதானம் தேவை.

**கும்பம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உங்களை தவறாக நினைத்துக் கொண்டிருந்த வர்கள் இப்பொழுது அது தவறு என்று நினைப்பார்கள்.

# மேகதாது அணை விவகாரம் முதல்வர் தலைமையில் ஆலோசனை

*சென்னை, ஜுலை 04*

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக முதல்வர் மு. க. ஸ்டாலினுடன் அமைச்சர் துரைமுருகன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

மேகதாது அணையை கட்டுவோம் என கர்நாடக துணை முதல்வர் டி. கே. சிவகுமார் பேசியதற்கு தமிழ்நாட்டில் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன.

மேகதாதுவில் அணை கட்டக்கூடாது என்பதில் தமிழ்நாடு அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும் ஒருபோதும் மேகதாதுவில் அணை கட்ட தமிழ்நாடு அரசு அனுமதிக்காது, மீறினால் காவிரி ஆணையத்திடம் சென்று முறையிடுவோம் என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேகதாது விவகாரம் தொடர்பாக முதல்வர் மு. க. ஸ்டாலினுடன் அமைச்சர் துரைமுருகன் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் இந்த கூட்டத்தில் நீர்வளத்துறை அதிகாரிகள் உள்பட அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்.

(ஐ)

# அ. தி. மு. க. உறுப்பினர்களாக 2 கோடி பேரை சேர்ப்பது இலக்கு

## எடப்பாடி பழனிசாமி



*சேலம், ஜுலை 04*

அ. தி. மு. கவில் 2 கோடி பேரை உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்பதே இலக்கு என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

சேலத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழக முதல்வர், தான் எதிர்க்கட்சியாக இருந்த போது, கெட்டதைக்கூட தைரியமாக செய்ய முடிந்தது என்று கூறுவது சரியல்ல. எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அ. தி. மு. க. அப்படித்தான் செயல்பட்டு வருகிறது. ஆனால், அ. தி. மு. க. ஆட்சியின்போது, எதிர்க்கட்சியான தி. மு. க. எந்தளவுக்கு செயல்பட்டு வந்தது என்பதை முதல்வர் ஸ்டாலினே ஒப்புக் கொண்டுள்ளார்.

அ. தி. மு. க. ஆட்சியின் போது, கொரோனா காலத்திலும் சிறப்பான மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்கினோம். இப்போது உள்ள அரசுக்கு, மக்களுக்கான மருத்துவ சேவையை பற்றி எல்லாம் கவலை இல்லை.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய உறுப்பினர் சேர்க்கை நடத்தப்பட வேண்டும். அதன்படி, 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிமுகவில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. தற்போது 1.35 கோடி பேர் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

எங்கள் இலக்கு 2 கோடி பேரை உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்பது தான். அ. தி. மு. க. தொண்டர்கள் எங்களிடம்தான் உள்ளனர். இனி, தொண்டர்கள் என் பக்கம் என்று பன்னீர்செல்வம் கூறுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுவிட்டது. திமுக-வின் 'பி' அணியாக பன்னீர்செல்வம் செயல்பட்டு வருகிறார் - என்றார்.

(ஐ)

# அ. தி. மு. க. ஊழல்வாதியை காப்பாற்ற தி. மு. க. முயல்கிறது

## பா. ஜ. க. தமிழக தலைவர் சாடல்



*நாகர்கோவில், ஜுலை 04*

அ. தி. மு. க. ஆட்சியில் அமைச்சராக இருந்த போது ஊழல் செய்தது நிரூபணமானதை தொடர்ந்தே செந்தில் பாலாஜி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஊழல்வாதியான அவரை காப்பாற்ற தி. மு. க. அரசு முயற்சித்து வருகிறது என்று பா. ஜ. க.மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நாகர்கோவிலில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு கூடியுள்ள கூட்டத்தை பார்க்கும் போது வரும் மக்களவை தேர்தலில் கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிடும் பா. ஜ. க. வேட்பாளர் இந்தியாவிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தல் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

செந்தில் பாலாஜி விவகாரத்தில் கடந்த முறை அவர் அமைச்சராக இருந்த போது ஊழல் செய்தது நிரூபணமானதை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஊழல்வாதியான அவரை காப்பாற்றும் வகையில் தி. மு. க. அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. மீனவர்களுக்காக பா. ஜ.க. ஆட்சியில் தான் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து பல இலட்சம் தொன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது - என்றார்.

(ஐ)

# தீவிர அரசியலுக்கு வருவதற்கு நடிகர் விஜய் தயாராகிறார்!



*சென்னை, ஜுலை 04*

நடிகர் விஜய் தீவிர அரசியலில் ஈடுபட நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார் என்று அறிய வருகின்றது.

2025ஆம் ஆண்டு முழுவதும் மக்கள் இயக்கம் மற்றும் களப்பணிகளில் கவனம் செலுத்தவுள்ளார். எனினும், அடுத்தாண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் விஜய் கவனம் செலுத்த போவதில்லை எனவும் சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள 2026ஆம் ஆண்டில் மாநாடுகள் நடத்த வுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

விஜயின் அரசியல் பயணம் குறித்து விரைவில் அதிகார பூர்வ அறிக்கை வெளியாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தற்போது விஜய் தான் ஒப்பந்தமாகியுள்ள திரைப்படங்களில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். 2024 டிசெம்பருக்குள் படங்களை முடித்து விட்டு தீவிர அரசியலில் களமிறங்குவார் என்றும் கூறப்படுகின்றது.

(ஐ)

# கட்டுக்கரை குளத்தில் மீன்பிடித்தவர் நீரில் மூழ்கி பலி; மற்றொருவர் மாயம்

மன்னார், ஜூலை 04

**கட்டுக்கரை குளத்தில் வள்ளத்தில் மீன்பிடிக்க சென்றவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மற்றொருவர் காணாமல்போயுள்ளார்.**

மன்னார் - கட்டுக்கரை குளத்தில் மீன்பிடிக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை வள்ளத்தில் இருவர் சென்றிருந்தனர். இவர்கள் காணாமல் போன நிலையில் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது, ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பரப்பாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த தந்தையான விசுவா (வயது-57) என்பவராவார். இவர் 4 பிள்ளைகளின் தந்தையாவார்.

காணாமல் போன மற்றைய மீனவர் பரப்பாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த விசுவாசம் சந்திரகுமார் பர்னாந்து வயது-37) என்பவராவார்.

அவர்கள் சென்ற வள்ளத்தில் நீர் நிரம்பி தாண்டதாக தெரிய வந்துள்ளது. மற்றைய மீனவரை தேடும் முயற்சி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

மீட்கப்பட்ட சடலம் மன்னார் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பில் உயிலங்குளம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# திரிபோஷாவுக்கு பதிலாக முட்டை வழங்க பரிந்துரை

## குடும்பநல சுகாதார சேவைகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 04

திரிபோஷா உற்பத்தியை வழமைக்கு கொண்டு வரும் வரையில் 6 மாதம் - 3 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு மாற்று போசனை திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரச குடும்பநல சுகாதார சேவைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

குழந்தைகள் முட்டைகளை அதிகமாக உண்பதால் திரிபோஷாவுக்கு மாற்றீடாக முட்டையை வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என அந்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் திரிபோஷா குழந்தைகளுக்கு வழங்கப்படாமல் உள்ளமை பிரச்னையாக எழுந்துள்ளது.

மேலதிக ஊட்டச்சத்தாக வழங்கப்பட்ட திரிபோஷாவை வழங்க முடியாத நிலை காணப்படுமாயின் அதற்கு நிகரான மாற்றீடு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

குடும்பநல சேவையாளர்கள் என்ற அடிப்படையில், 6 மாதம் முதல் 3 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு மீண்டும் திரிபோஷ வழங்கப்படும் வரையில், மாற்றீடாக மாதாந்தம் ஒரு தொகை முட்டையை வழங்க பரிந்துரைப்பதாகவும் அரச குடும்பநல சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

# 20 ஜெலற்றின் குச்சிகள் பாசையூரில் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 04

பாசையூர் பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் இருந்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் விசேடஅதிரடிப் படை பொலிஸார் நேற்று காலை இந்த வெடிமருந்துகளை மீட்டனர்.

பொதி ஒன்றினுள் இருந்து 20 ஜெலற்றின் குச்சிகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட ஜெலற்றின் குச்சிகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜெலற்றின் குச்சிகளில் உள்ள வெடி மருந்துகளை பிரித் தெடுத்து, மீன் பிடிக்கான டைனமற் தயாரிக்க மீனவர்கள் பயன்டுத்தப்படுகின்றது. டைனமற் பயன்படுத்தி மீன் பிடிப்பது சட்டவிரோத செயலாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மறவன்புலவு சச்சிதானந்தனை இல்லம் சென்று சந்தித்த மைத்தரி

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்ப்பாணம் வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தனை அவரின் இல்லத்துக்கு சென்று சந்தித்தார்.

மரியாதை நிமித்தம் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 29ஆம் திகதி நடந்த சந்திப்பு ஒன்றில், இந்துக்களும் பௌத்தர்களும் மதநல்லிணக்கத்தோடு வாழ்ந்தார்கள் என்பதற்கான வரலாற்று ஆதாரங்களை முன்வைத்த மறவன்புலவு சச்சிதானந்தன் அண்மைக்காலமாக அதற்கு ஆபத்து ஏற்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தார். இந்த நிலையில், சச்சிதானந்தனின் அனுபவத்துக்கும், வரலாற்று ஆய்வுக்கும், சமூக பணிக்கும் மதிப்பளிக்கும் விதமாக அவரின் இல்லத்துக்கு சென்று



அவரை சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, இந்துமத நூல்கள், 15 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட பன்னிரு திருமுறைகளின் சிங்கள மொழி பதிப்பு, சிவபெருமான் தொடர்பான சிங்கள மொழி நூல், யாழ். மாவட்டத்தில் ஆக்கிரமிப்புக்குள்ளான இந்து ஆலயங்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரையின் பிரதிகளை மைத்திரிபால சிறிசேனவுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருத்துவர்களின் ஓய்வு வயதை அதிகரிக்க அமைச்சரவை பத்திரம்!

கொழும்பு, ஜூலை 04



விசேட மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நீடிப்பதற்கான அமைச்சரவை பத்திரம் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மருத்துவத்துறையில் அதிகரித்து வரும் வெற்றிடங்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெறும் வயதை 63ஆக நீடிக்க சுகாதார அமைச்சு கடந்த வாரம் பரிந்துரைத்தது. இந்தத் தகவல் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் தெரிவிக்கப்பட்டது.

ஓய்வுபெறும் (60) வயதை சவாலுக்கு உட்படுத்தி விசேட மருத்துவர்கள் குழு தாக்கல் செய்த மனு தொடர்பில் இந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யுவதியை தாக்கிய கிளிநொச்சி கான்ஸ்டபிள் பதவி இடைநீக்கம்

கொழும்பு, ஜூலை 04

காதல் விவகாரத்தில் யுவதிமீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியை சேர்ந்த பொலிஸ் பயிலுநர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இரத்தினபுரி - தனமல்வில, ரணவர பிரதேசத்தில் வசிக்கும் யுவதியின் வீட்டுக்குள் நுழைந்து அந்தப் பெண்ணை உதைத்து காயப்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் சந்தேகநபரின் காதலி என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், கிளிநொச்சியை சேர்ந்த கான்ஸ்டபிளான பயிலுநர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# சிவபூமி மனவிருத்தி பாடசாலை ஆண்டுவிழா சிறப்புற நடந்தது!





யாழ்ப்பாணம், ஜூலை 04

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவானது கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி மனோமோகன் தம்பதியினர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. அத்துடன், ஆறு. திருமுருகனின் வாழ்க்கை வரலாற்றை ரிஷி தொண்டு நாதன் சிறு தொகுப்பாக எழுதிய கையேட்டு நூலும் வெளியிடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் உழைக்கும் மக்களுக்கே பாதிப்பு

## எதிர்க்கட்சி எதிர்க்க இதுவே காரணம் என்கிறார் ஹர்ஷ

**கொழும்பு, ஜூலை 04**

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்பது சாதாரண உழைக்கும் மக்களை மாத்திரமல்ல பணக்காரர்களையும் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**



அரசாங்கம் அவ்வாறு செய்யாத காரணத்தாலேயே எதிர்க்கட்சிகள் இந்த பிரேரணையை எதிர்த்தன என்றும் அவர் மேலும் கூறினார்.

“பொதுவாக வருங்கால வைப்பு நிதி என்பது உழைக்கும் மக்கள் ஓய்வுபெற்ற பிறகு எதிர்காலத்தில் செலவழிக்க வேண்டிய ஒரே நிதியாகும். இந்த நிதிக்கு என்ன ஆனது என்பதை நான் தொடர்ந்து காண்பித்தேன். எடுத்துக்காட்டாக, 2022ஆம் ஆண்டில் இந்த நிதியின் உறுதியான வருவாய் உண்மையானது. அவர்களின் சேமிப்பின் மீதான வருமானம் -47.

உதாரணமாக, நம் மகளுக்கு திருமணம் செய்து வைக்க 100 பேரை அழைக்க நினைத்தால், இந்த வருங்கால வைப்பு நிதியில் இருந்து திருமணத்துக்குக் கொஞ்சம் பணம் செலவழிக்கலாம் என நினைத்தால், இப்போது 100 பேருக்கு பதிலாக 50 பேரையே அழைக்கலாம். இது உண்மை.

உள்ளூர் கடன் மறுசீரமைப்பு சுமையும் அதே நிதியில் வைக்கப்பட்டுள்ளது. அங்குதான் நியாயம் பற்றிய கேள்வி எழுந்தது. இதை ஒட்டுமொத்தமாக அனைவரிடமும் பகிர்ந்து கொண்டால், ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்தலாம். இது உழைக்கும் மக்களுக்கு மட்டுமல்ல, பணக்காரர்கள் மற்றும் வங்கி உரிமையாளர்களுக்கும் பொருந்தும். இதன் முழு சுமையும் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஈ. ரி. எவ். நிதியின் மீது சுமத்தப்பட்டதால் எதிர்க்கட்சியாகிய நாங்கள் அதை கடுமையாக எதிர்த்தோம்.”, என்றார்.

(ஐ)

# யாழ். நகருக்கு அண்மையில் கசிப்பு காய்ச்சியவர் கைது

கொழும்பு, ஜூலை 04

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் அருகே கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 28 வயதுடைய அதே இடத்தை சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 30 லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்தக் கைது இடம்பெற்றது.

(ஐ)

# கதிர்காமம் சென்று திரும்பிய ஐந்து பேர் விபத்தில் காயம்!

கொழும்பு, ஜூலை 04

கதிர்காம யாத்திரை சென்று திரும்பியவர்களை ஏற்றிச் சென்ற கெப் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் ஐவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கதிர்காமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

*மாணவி வன்புணர்வு:*

# மூன்று வருடங்களின் பின்னர் கிடைத்தது மருத்துவ அறிக்கை!

கொழும்பு, ஜூலை 04

மாணவி ஒருவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான மருத்துவ அறிக்கை மூன்று வருடங்களின் பின்னரே தமக்கு கிடைத்துள்ளதாக வெலிமடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை - வெலிமடை பொலிஸ் பிரிவில் கடந்த 2020 ஜனவரி 4ஆம் திகதி பேருந்து ஒன்றின் நடத்துநரால் மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இந்த சம்பவத்தின் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அறிக்கைக்காக சட்ட மருத்துவ அதிகாரியால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மருத்துவ அறிக்கை கடந்த சனிக்கிழமையே கிடைத்ததாக வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவிக்கு தற்போது 19 வயது எனவும் அவர் ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்த பொலிஸார், அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் கூறினர்.

(ஐ)

# தனது வீட்டின்மீதே துப்பாக்கி சூடு நடத்த ஏற்பாடு செய்தவர் கைது!

கொழும்பு, ஜூலை 04

தனது வீட்டின்மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள 10 இலட்சம் ரூபாயை வழங்கிய நிறுவனத்தின் இயக்குநர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் 22ஆம் திகதி கொழும்பு - பொரளை வீதியில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இது தொடர்பில் விசாரணை நடத்தி சி. ஐ. டியினர் வீட்டின் உரிமையாளாரான நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் உள்ளிட்ட நால்வரை கைது செய்தனர். அத்துடன், ரி-56 ரக துப்பாக்கி 64 தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களான நிறுவனத்தின் இயக்குநர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்தே இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றது. மற்றவர்களை சிக்க வைப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் இந்த நாடகத்தை அரங்கேற்றினார். இதற்காக 10 இலட்சம் ரூபாயை பரிமாற்றம் செய்தார் என்று கூறப்படுகின்றது.

விசாரணை நடத்திய பொலிஸார் சம்பந்தப்பட்ட பணிப்பாளர், துப்பாக்கி சூட்டை நடத்தியவர், பாதுகாப்பு அதிகாரி, வாகன சாரதி என நால்வரை கைது செய்தனர்.

இவர்களுக்கு எதிரான ஆதாரங்களை திரட்டியுள்ள பொலிஸார் கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# மாணவனை கடத்திய பெண் பொலிஸ் கைது!

கொழும்பு, ஜூலை 04

பாடசாலை முடிந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த 16 வயது மாணவனை வழிமறித்து - கடத்திச் சென்று அச்சுறுத்தி தாக்கினார் என்று கூறப்படும் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் சார்ஜன்ட் ஒருவரை கும்புறுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனது மகளுடனான காதல் உறவை நிறுத்துமாறு மிரட்டியே மாணவன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சார்ஜன்ட் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

இந்த பெண் சார்ஜன்டை பணி இடைநீக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் மாணவன் கம்புறுபிட்டி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ)

# ரூ. 1.5 கோடி பெறுமதியான நகைகளை கொள்ளையடித்த மூன்று பேர் கைது!

கொழும்பு, ஜூலை 04

ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - பொரலஸ்கமுவ, கட்டுவாவல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பணிப்பெண்ணை கத்தியை காட்டி மிரட்டி சந்தேகநபர்கள் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட பொருட்களில் அமெரிக்க டொலர்கள் உட்பட பல வகையான தங்க நகைகள் மற்றும் பணம் இருந்துள்ளது.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்து கைக்குண்டு மற்றும் 24 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# உணவு பயிருக்கும் விலை நிர்ணயம் எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை!

கொழும்பு, ஜூலை 04

உணவுப் பயிர்களுக்கு பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிர்ணய விலை முறைமையால் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நீதி கிடைக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மையில் திஸ்ஸமஹாராமவில் நடைபெற்ற விவசாயிகள் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் அமைப்புகள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து விலை சூத்திரம் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிக்கு நியாயமான விலையை பெறுவதற்கு உற்பத்திச் செலவுடன் ஒப்பிடும் போது நிலையான கொள்முதல் விலையுடன் கூடிய முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்றும் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

(ஐ)

# மலையகத்தில் மழையால் மரக்கறி உற்பத்தி பாதிப்பு

ஹற்றன், ஜூலை 04

மலையகத்தில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் மரக்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது.

தற்போது பயிரிடப்பட்டுள்ள மரக்கறிகளின் அறுவடை காலம் நெருங்கியுள்ளது. இந்த நிலையில் தொடர்ந்தும் அதிகரித்து வரும் மழையால் மரக்கறிகள் அழுகி போவதற்கான ஆபத்து உள்ளது.

மேலும், குறித்த நிலை தொடர்ந்து நீடிப்பதன் காரணமாக தற்போது சந்தையில் மரக்கறிகளின் விலை குறிப்பிட்டளவு உயர்ந்துள்ளது. தொடர்ந்தும் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்குமாயின் மேலும் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இக்காலப்பகுதியில் மரக்கறி வகைகளின் விலை வீழ்ச்சி காணப்பட்டிருக்கும். ஆனால், இந்த வருடத்தில் இவ்வாறு மரக்கறி வகைகள் விலை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

# மின்சார கட்டண உயர்வு தவறு என்பதை தற்போதைய குறைப்பு நிரூபித்துள்ளது!

## பொதுப் பயன்பாடுகள் குழுவின் முன்னாள் தலைவர்

கொழும்பு, ஜூலை 04

**கடந்த பெப்ரவரியில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டது தவறான தரவுகளின் அடிப்படையில்தான் என்பதை தற்போதைய மின் கட்டணக் குறைப்பு நிரூபித்துவிட்டது என்று முன்னாள் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

மின்சார கட்டண உயர்வுக்காக இலங்கை மின்சார சபை சமர்ப்பித்த சில தரவுகள் பிழையானவை எனவும் சரியான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் அதுவும் அதைத்தான் வெளிப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவை, சில அரசியல் அழுத்தங்கள் காரணமாக ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தனர். இன்று தமது தரவு தவறானது என தாமே ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதனால் தான் இலங்கை மின்சார சபை, முன்மொழிந்த 3 வீதத்துக்கு பதிலாக 14 வீத மின் கட்டண குறைப்பை மேற் கொள்ள தீர்மானித்துள்ளது. மின்சார பாவனையாளர்கள் மட்டுமன்றி பல்வேறு அநீதிகளினால் பாதிக்கப்படும் அனைத்து நுகர்வோரின் உரிமைகளையும் பாதுகாப்பதில் தாம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார் என்றும் அவர் கூறினார். (ஐ)

# மலைநாட்டில் கடும் மழை; ஆறுகள் பெருக்கெடுத்தன

கண்டி, ஜூலை 04

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் மழையால் மலையகத்தின் நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. அத்துடன், நீரோடைகள், ஆறுகளும் பெருக்கெடுத்துள்ளன.

மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது. தண்ணீரை வெளியேற்றுவதற்காக நேற்று திங்கட்கிழமை நீரேந்தும் பகுதிகளில் வான் கதவுகள் திறக்கப்பட்டன.

அந்தவகையில், மேல் கொத்மலை நீர்தேக்கத்தில் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டிருந்தது. இதனால், நீர்தேக்க பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும் படி அதிகாரிகளினால் பணிக்கப்பட்டுள்ளது.

மேலும், விமலசுரேந்திர நீர்தேக்கமும் முழுமையாக நிரம்பி மேலதிக நீர் நேற்று காலை முதல் வான் பாய்கின்றது. இதனால், அணைக்கட்டுக்கு கீழ் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. களனி ஆற்றை பயன்படுத்துபவர்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தெகிவளை மிருகக்காட்சி சாலை 87ஆவது ஆண்டு நிறைவு விழா!

கொழும்பு, ஜூலை 04

கொழும்பு - தெகிவளை மிருகக்காட்சி சாலையின் 87 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது.

1936 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் திகதி தெகிவளை மிருகக்காட்சி சாலை திறந்து வைக்கப்பட்டது. இதன், 87 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் செய்யப்பட்டிருந்தன.

இதன்போது வெளி இடங்களிலிருந்து கொண்டுவரப்படும் மிருகங்களுக்காக மிருக மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தேசிய மிருகக்காட்சிகள் திணைக்களம் வருடாந்தம் 100 கோடி ரூபாய் வருமானம் ஈட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 5,000 மாணவர்களுக்குக் கடன் இன்று முதல் விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஜூலை 04

உயர் கல்விக்காக வட்டியில்லா கல்விக் கடனை பெறுவதற்கு இன்று செவ்வாய்க் கிழமை முதல் விண்ணப்பிக்க முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இந்தக் கடன் திட்டத்தின் கீழ் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதன்போது, தொழில் கல்வி பாடநெறிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தக் கடன் திட்டத்துக்காக எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

# சட்டமா அதிபர் அடங்கிய குழு சிங்கப்பூர் பயணமாகின்றது!

கொழும்பு, ஜூலை 04

2021ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தில் மூழ்கிய எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி நிறுவனத்துடனான சந்திப்புக்காக சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் தலைமையிலான இலங்கை தூதுக்குழு இந்த மாதம் நடுப்பகுதியில் சிங்கப்பூர் செல்லவுள்ளது.

பேரழிவுக்கான அதிகபட்ச இழப்பீடு பெறும் முயற்சியில் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் காப்புறுதி நிறுவன பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலந்துரையாடலுக்காக இலங்கைக்கு வருவதற்கு குறித்த காப்புறுதி நிறுவனம் மறுத்ததை அடுத்து இலங்கை குழுவின் இந்த பயணத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

# புதுக்காட்டு சந்தி விபத்து; கெப் வாகன சாரதி காயம்



கிளிநொச்சி, ஜூலை 04

யாழ்ப்பாணம் நோக்கி பொருட்களுடன் வந்த கெப் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில், அதனை செலுத்திச் சென்ற சாரதி படுகாயமடைந்தார்.

ஏ-9 வீதியில் புதுக்காட்டு சந்திப் பகுதியில் நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான வாகன சாரதி பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தடுப்பூசி ஏற்றப்பட்ட பெண் பலி; அறிக்கை கோரியது அமைச்சு!

கொழும்பு, ஜூலை 04

ராகம மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அறிக்கை கோரவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஜாஎல வடக்கு பகுதியை சேர்ந்த 23 வயதான பெண்ணொருவரே அண்மையில் இவ்வாறு உயிரிழந்தார்.

அண்மையில் பேராதனை மருத்துவமனையிலும் தடுப்பூசி ஏற்றப்பட்ட 2 பெண்கள் உயிரிழந்தனர். இந்த விடயம் தொடர்பில் தற்போது முதலாவது அறிக்கை கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அஸ்வெசும திட்டம் தொடர்பாக ஐந்து இலட்சம் மேன்முறையீடு!

**சாகல ரத்நாயக்க தெரிவிப்பு**

கொழும்பு, ஜூலை 04

அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை 4 இலட்சத்து 91 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 6 ஆயிரத்து 773 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் ஜனாதி பதி பணியாள் தொகுதி பிரதானியுமான சாகல ரத்நாயக்க கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதிக்கான உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் ஹற்றன் நகரில் உள்ள தனியார் மண்டபமொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட பிரதான அமைப்பாளர் கே. கே பியதாச உள்ளிட்டவர்கள் சாகல ரத்நாயக்கவுக்கு வரவேற்பளித்தனர். இங்கு உரையாற்றிய சாகல,

அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை 4 இலட்சத்து 91 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 6 ஆயிரத்து 773 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அஸ்வெசும திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும். துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த நாட்டு மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஐக்கிய தேசியக் கட்சியை கிராமிய மட்டத்தில் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." எனவும் அவர் கூறினார். (ஐ)

# செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி: இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை தரும் ஐந்து முக்கிய வேலைகள் இவைதான்

ரெதாக்சியன்

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பம் காரணமாக பல்வேறு துறைகளில் மனிதர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படக்கூடும் என்ற கூற்று ஒருபுறம் வலுவாக வைக்கப்பட்டு வருகிறது. தொழில் நுட்ப வளர்ச்சியானது பெரும்பகுதி வேலைகளை அழித்துவிடும் என்ற அச்சம் இருந்தபோதிலும், எதிர் காலத்தில் புதிய வேலைவாய்ப்புகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

"உருவாகி வரும் செயற்கை நுண்ணறிவு காரணமாக என்ன நடந்து வருகிறது என்பதையும் பல்வேறு துறை களில் எவ்வளவு வேகமாக செயற்கை நுண்ணறிவு ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதையும் நாம் அனை வரும் கண்கூட பார்த்து வருகிறோம்" என்று கூறுகிறார் உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) நிர்வாக இயக்குநரும், புதிய பொருளாதாரம் மற்றும் சமூகத்திற் கான மையத்தின் தலைவருமான சாடியா ஜாஹிடி.

அடுத்த ஐந்தாண்டுகளில் மிக உயர்ந்த வளர்ச்சியை அடையும் என்று எதிர்பார்க்கப்படும் வேலையாக செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள் மற்றும் இயந்திர கற்றல் நிபுணர்கள் பணிகள் இருந்தாலும் உலகப் பொருளாதார மன்றத்தின்படி, வேறு சில வேலைகளி லும் வாய்ப்புகள் உருவாகி வருகின்றன.

எடுத்துக்காட்டாக, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் நிபுணத்துவம் பெற்றவர், விவசாய உபகரணங்களை இயக்குபவர்கள் போன்றவர்களை பணியில் அமர்த்து வது என்பது அதிகரித்து வருகிறது. இந்த வேலை அடுத்த ஐந்து ஆண்டுகளில் அதிக தேவை இருக்கும் முதல் 10 வேலைகளில் ஒன்றாகவும் உள்ளது.

உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 45 பொரு





ளாதாரங்களில் 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பணிபுரியும் 803 பெரிய நிறுவனங்களில் மேற்கொள் ளப்பட்ட விரிவான கணக்கெடுப்பின் அடிப்படையில் அதிக தேவை இருக்கும் 10 வேலைகள் தொடர்பான ஆய்வை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் மேற்கொண்டது.

கணக்கெடுக்கப்பட்ட நிறுவனங்களில் கிட்டத்தட்ட 75 வீத நிறுவனங்கள் தங்கள் வணிகத்தில் செயற்கை நுண்ணறிவைப் பின்பற்ற வாய்ப்பு இருப்பதாக நம்புகின்றன என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

மேலும் வேலைகள் மீதான தொழில்நுட்ப தாக்கம் குறித்து பேசும்போது, நான் இழந்ததை விட அதிக வேலைவாய்ப்புகள் அடுத்த 5 ஆண்டுகளில் உருவாக் கப்படும் என்று பெரிய நிறுவனங்களின் முதலாளிகள் மதிப்பிடுகின்றனர்.

உலகப் பொருளாதார மன்றத்தின் ஆய்வின்படி, 2023 மற்றும் 2027 க்கு இடையில் அதிக வளர்ச்சி திறன் உள்ள வேலைகளில் முதல் 10 வேலைகள் குறித்து பார்ப்போம்.

**செயற்கை நுண்ணறிவு நிபுணர் மற்றும் இயந்திர கற்றல் நிபுணர்**

மனித சிந்தனைகளை கணினிகள் மூலம் பிரதிபலிக்க வைப்பதே இந்த வேலையின் பிரதான நோக்கம்.

மக்களைப் போலவே சிந்திக்கவும் சிக்கலான பிரச்னைகளை தீர்க்கவும் திறன் படைத்த கணினி அமைப்பு களை செயற்கை நுண்ணறிவு வல்லுநர்கள் உருவாக்குகிறார்கள்.

செயற்கை நுண்ணறிவு அமைப்பால் சிக்கல்களை தீர்க்கவும், கேள்விகளுக்கு பதிலளிக்கவும், பொதுவாக மனிதர்களால் செய்யப்படும் பணிகளை முடிக்கவைப் பதிலுமே இவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

எனவே, பல்வேறு தரவுகளை பகுப்பாய்வு செய்து சொந்த முடிவுகளை எடுக்கும் வகையில் இயந்திரம் முழுவதுமாக தன்னாட்சி முறையில் இயங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அந்த வகையில், ஒரு குறிப்பிட்ட சிக்கலை மிகத் திறமையாக தீர்ப்பதற்கு செயற்கை நுண்ணறிவுக்கு இயந்திர கற்றல் நிபுணர் உதவுகிறார். பல்வேறு வித மான சிக்கல்களை தீர்த்து வைப்பது உங்களின் குறிக் கோள் அல்ல என்பதை இங்கு நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பல்வேறு சிக்கல்களையும் தீர்க்கும் திறன் படைத்த நுண்ணறிவுகளை உருவாக்குவதில் செயற்கை நுண் ணறிவு விஞ்ஞானிகள் ஈடுபடுகிறார்கள் என்றால், இத்த கைய செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் ஒரு சிக்க லுக்கு மிகவும் துல்லியமாகவும் விரைவாகவும் முடிவு களை அடைய இயந்திர கற்றல் நிபுணர்கள் உதவுகின்ற னர்.

செயற்கை நுண்ணறிவு விஞ்ஞானியும் இயந்திர கற்றல் நிபுணரும் தங்களது அறிவை அனைத்து துறைகளிலும் பயன்படுத்த முடியும்.

**சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை பாதுகாக்கும் நிபுணர்கள்**

இவர்களின் பிரதான பணி, சுற்றுச்சூழ லில் தங்கள் நிறுவனத்தால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கும் வகையில் ஆற்றல் வள திட்டங்களை உருவாக்கி செயல் படுத்துவது.

நீங்கள் எந்த நிறுவனத்துக்கு வேலை செய்கின்றீர்கள் என்பதை பொறுத்து உங்களின் பொறுப்பும் வேறு படும். எடுத்துக் காட்டாக, மாசுபடுத்தும் உமிழ்வைக் குறைப்பதற்கான திட்டங்களை நிர்வகித்தல், ஆற்றல் நுகர்வை குறைப்பது அல்லது முதலீட்டுத் திட்டங்களில் சுற்றுச்சூழல் கொள்கைகளின் வளர்ச்சியில் பங்கேற்பது என இது மாறுபடும்.

நீங்கள் பணியாற்றும் துறை பரந்துபட்டது என்ப தால், நிலைத்தன்மை குறித்த நிபுணர் ஆவதற்கு என்று தனிப்பட்ட எந்த பாதையும் கிடையாது.

பொதுவாக இந்த வகை நிபுணர்கள் சுற்றுச்சூழல் அறிவியல் தொடர்பான படிப்புகளை படித்திருப்பார் கள் என்றாலும் தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்வது, சிக்கலை கண்டறிவது, நிறுவனத்துக்கு பயனுள்ள தீர்வுகளை கூறுவது போன்ற திறமையும் தேவை.

**வணிக நுண்ணறிவு ஆய்வாளர்**

ஒரு நிறுவனம் தனது வணிகம் தொடர்பான முடிவு களை எடுக்க உதவுவது குறித்த படிப்புகளை வணிக நுண்ணறிவு ஆய்வாளர்கள் படிக்கின்றனர்.

இவர்கள் ஏராளமான தகவல்களை பகுப்பாய்வு செய்து, ஒரு நிறுவனத்துக்கு பாதிப்பு எவ்வாறு ஏற்படு கிறது என்பதை கண்டறிந்து அதன் உற்பத்தியையும் செயல்திறனையும் மேம்படுத்துவது தொடர்பான



ஆலோசனைகளை வழங்குவார்கள்

நிறுவனங்களில் செயல்முறைகளை படிக்கும் இவர் கள், அளவீடுகளை மதிப்பாய்வு செய்வது, தங்கள் தொழில்துறை மற்றும் போட்டியாளர்கள் தொடர்பான தரவுகளை பகுப்பாய்வு செய்வது, வாய்ப்புகளை எப்படி ஏற்படுத்துவது என்பதை அடையாளம் காண்பது மற்றும் வணிக சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை முன்மொழிகிறார்கள்.

பொதுவாக, அவர் நிறுவனத்தில் உள்ள செயல்முறை களைப் படிக்கிறார், அளவீடுகளை மதிப்பாய்வு செய்கி றார், தொழில்துறை மற்றும் போட்டியாளர் தரவை பகுப்பாய்வு செய்கிறார், வாய்ப்புகளை அடையாளம் காண்கிறார் மற்றும் வணிக சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை முன்மொழிகிறார்.

கணினி அறிவியல், தரவு அறிவியல், புள்ளியியல், வணிக நிர்வாகம், பொருளாதாரம் மற்றும் பிற தொடர்புடைய துறைகள் பற்றிய அறிவையெல்லாம் அவர் ஒன்றாக சேர்த்து செயல்படுத்துகிறார்.

**தகவல் பாதுகாப்பு ஆய்வாளர்**

பயனர்களின் கிரெடிட் கார்டு எண்கள், பாஸ்வோர் டுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் போன்றவை மற்றும் தங்கள் நிறுவனம் தொடர்பான முக்கியமான வணிக தரவுகள் கசிவது நிறுவனங்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விடும். எனவே, இவற்றை பாதுகாப்பதற்கு நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்து கின்றன.



எனவே, தகவல் பாதுகாப்பு ஆய்வாளரின் தேவை என்பது இங்கு அவசியமாகிறது. சைபர் தாக்குதல்களில் இருந்து கணினி இணைப்புகள், கணினிகள், தரவுகள் மற்றும் முக்கியமான தகவல்களை பாதுகாப்பதற்கு இவர்கள் உதவுகின்றனர்.

சைபர் தாக்குதல் நடத்த முடியாதபடியான அமைப்பை வடிவமைப்பது, கண்காணிப்பது, பாதுகாப்பு அமைப்புகளைப் புதுப்பிப்பது, ஒருவேளை சைபர் தாக்குதல் நடத்தப்பட்டால் அதனை எப்படி எதிர்கொள்வது என்பவை தொடர்பாக இவர்கள் குழுவாக இணைந்து வேலை செய்கின்றனர்.

இந்த பணியில் ஈடுபட விரும்புபவர்கள் குறைந்த பட்சம் கணினி தொடர்பான பட்டங்களை பெற்றிருக்க வேண்டும். நாடுகளை பொறுத்து சைபர் செக்யூரிட்டி தொடர்பான சான்றிதழ்கள் படிப்புகளும் உள்ளன.

**பின்டெக் பொறியாளர்**

உலகில் வேகமாக வளர்ந்து வரும் மென்பொருள் சுற்றுச்சூழல் அமைப்புகளில் பின்டெக் தொழிலும் ஒன்றாகும். நிதி மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வார்த்தையே பின்டெக். நிதி சார்ந்த சேவைகளை புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் வழங்கும் நிறுவனங்கள் பின்டெக் நிறுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பின்டெக் துறையில் பணியாற்றும் பொறியாளர், செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்ட அறிவார்ந்த வங்கியியல், வாடிக்கையாளர் சேவை தொடர்பான அமைப்புகளின் மேலாண்மை, டிஜிட்டல் கட்டணச் செயலாக்கம், குறியாக்கவியலின் அடிப்படை யில் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகள், டிஜிட்டல் சொத்து மேலாண்மை அல்லது இடர் மேலாண்மைக் கான தரவு பகுப்பாய்வு போன்ற தொழில்நுட்ப நிதியில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஜாவா ஸ்கிரிப்ட், பைத்தான், ரூபி, பிஹெச்பி, ஹெச்டிஎம்எல், சிஎஸ்எஸ் போன்ற பலவிதமான ப்ரோ கிராமிங் மொழிகளை அவர்கள் கையாள்வதுடன் மிகப்பெரிய தரவுகள், க்ளவுட் தளங்களிலும் வேலை செய்கின்றனர்.

# காற்றுவெளிக் கிராமத்தில் ஒரு கண்ணகியம்மன்

நிலாந்தன்



கடந்த வாரம் புங்குடுதீவில் நடந்த கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை நோக்கிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்தார்கள். 1991ஆம் ஆண்டு தீவில் நிகழ்ந்த இடப்பெயர்வுகளின் பின் புங்குடுதீவை நோக்கி இவ்வளவு தொகையான மக்கள் திரண்டு வந்தமை இதுதான் முதல் தடவை.

அண்மை ஆண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இவ்வாறு வெவ்வேறு நிகழ்வுகளை நோக்கி ஒன்றுதிரளக் காணலாம். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூறாவது ஆண்டுக் கொண்டாட்டம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, சில நாட்களுக்கு முன் மெத்தடிஸ்ட் மகளிர் கல்லூரி போன்றன தமது இருநூறாவது ஆண்டு விழாவை கொண்டாடியபோது பழைய மாணவர்களும் உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்த நிகழ்வுகளை நோக்கித் திரண்டார்கள். மிகச் செழிப்பாக பண உதவிகளைச் செய்தார்கள். சில பாடசாலைகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் வழங்கும் உதவிகள் கோடிக்கணக்கானவை.

கண்ணகி அம்மனுக்கும் அவ்வாறு கோடிக்கணக்காக காசு திரட்டப்பட்டிருக்கிறது. கிடைக்கும் தகவல்களின்படி அக்கோவிலை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 90கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோயிலின் ஒவ்வொரு தூணுக்கும் தலா 5லட்சம் ரூபாய் புலம்பெயர்ந்த ஊர்வாசிகளிடமிருந்து திரட்டப்பட்டிருக்கிறது. மொத்தம் 200க்கும் குறையாத தூண்கள் அங்கே உண்டு. கும்பாபிஷேகத்திலன்று ஒரு புலம்பெயர்ந்த தமிழர் கிட்டத்தட்ட ஏழரை லட்சம் ரூபாய் செலவழித்து பக்தர்கள் அனைவருக்கும் இலவசமாக ஐஸ்கிரீம் விநியோகித்தார். கடந்த மூன்று தசாப்தங்களின் பின் புங்குடுதீவை நோக்கி ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்த ஒரு நிகழ்வு அது.

இலங்கைத்தீவில் மட்டுமல்ல இப்பிராந்தியத்திலேயே ஆளில்லா வீடுகள் அதிகமுடைய ஒரு பிரதேசமாக தீவுப் பகுதியைக் குறிப்பிடலாம். குறிப்பாக புங்குடுதீவில் உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி 4000க்கும் சற்று அதிகமான மக்கள் வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது.பேராசிரியர் குகபாலன் 4000க்கும் குறைவான மக்களே அங்கே இருப்பதாகக் கூறுகிறார். புங்குடுதீவும் உட்பட பெரும்பாலான தீவுப்பகுதிகளில் சனத்தொகை குறைவு. ஆளற்ற வீடுகளே அதிகம்.



ஒரு காலம் தேவாலயங்களின் பட்டினம் என்று வர்ணிக்கப்பட்ட ஊர்காவற்றுறை இப்பொழுது கைவிடப்பட்ட வீடுகளின் பட்டினமாக மாறிவிட்டது. அங்கெல்லாம் பழம்பெரும் வீடுகளைச் சூழ்ந்து காடு வளர்ந்து கிடக்கின்றது. அப்படித்தான் நெடுந்தீவிலும். தீவுகளில் சன நடமாட்டம் குறைந்த காரணத்தால் அங்கே குற்ற செயல்களுக்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. புங்குடுதீவில் வித்யா படுகொலை, நெடுந்தீவில் புலம்பெயர்ந்தவர்களும் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமை, அனலைதீவில் புலம்பெயர்ந்த தமிழர் கொல்லப்பட்டமை போன்றவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

தீவுகள் இடம்பெயரத் தொடங்கியது போரினால் மட்டும் அல்ல. பொருளாதாரக் காரணங்களுக்காகவும்தான். குடிநீர் ஒரு முக்கிய பிரச்சினை. அதுதவிர கல்வி, மருத்துவ, தொழிற் தேவைகளுக்காகவும் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்த்தார்கள். இப்பொழுதும் இடம்பெயர்கிறார்கள். அயலில் ஆட்கள் இல்லையென்றால் தனித்து விடப்பட்ட வீடுகளுக்கு இயல்பாகவே பயம் தொற்றிக் கொள்ளும். அது மேலும் இடப்பெயர்வை ஊக்குவிக்கும்.

போர், இடப்பெயர்வை வாழ்வின் ஒரு பகுதியாக்கியது. போர்க்காலத்தில் மக்கள் தொகையாக இடம்பெயரும் ஒரு போக்கு முதலில் தீவுகளில்தான் தொடங்கியது. முதலில் காரைநகர். அதன்பின் லைடன்தீவுகள் என்று அழைக்கப்படும் ஊர்காவற்துறையும் உள்ளிட்ட தீவுகள். முடிவில் முழு யாழ்ப்பாணமும் இடம்பெயர்ந்தது. இவ்வாறு ஆளற்றுப்போன தீவுகளைப்பற்றி புங்குடுதீவைச் சேர்ந்த கவிஞர் சு.வில்வரத்தினம் எழுதிய கவிதைத் தொகுப்புக்குப் பெயர் “ காற்றுவெளிக் கிராமம்”

தீவுகளில் இருந்து மக்கள் மேலும் வெளியேறுவார்களாக இருந்தால் அங்கு ஒரு மாகாண சபை உறுப்பினரைக்கூட தெரிவு செய்வதற்கு ஆட்கள் இல்லாமல் போய்விடும். ஒரு காலம் அங்கே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யுமளவுக்கு 36 ஆயிரத்துக்கும் குறையாத வாக்காளர்கள் வசித்தார்கள்.

எனவே தீவுகளை நோக்கி எப்படி ஆட்களை கொண்டு வரலாம் என்று சிந்திப்பதே தீவுகளில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் முன்னால் உள்ள முக்கிய பொறுப்பாகும். ஒரு நாள் திருவிழாக்கள், சில நாள் கொண்டாட்டங்களை நோக்கி மக்களைத் திரட்டுவதற்கு மப்பால், தமது தாய்க் கிராமத்தை நோக்கி என்றென்றும் மக்கள் திரளக்கூடிய பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் தொடக்க காலத்திலேயே தீவுகளைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் புலம்பெயர்ந்தார்கள். அவர்களில் சிலர் தமது சொந்தத்தீவுகளில் தனிப்பட்ட முறையில் தங்களால் இயன்ற அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். எழுவைதீவில் மருத்துவர் நடேசன் கட்டிய வைத்தியசாலை, அனலைதீவின் நீட்சியாகவுள்ள புளியந்தீவில், ஒரு வீடமைப்புத் திட்டம், புங்குடுதீவில் சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டங்கள் போன்ற சில உதாரணங்களை இங்கு சுட்டிக் காட்டலாம்.



வடமாகாணசபை இயங்கத் தொடங்கியபோது, முதலமைச்சரிடம் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பா.அகிலன் தீவுகளை மையமாகக் கொண்ட ஒரு சுற்றுலாத் திட்டத்தை முன்வைத்தார். ஒவ்வொரு தீவிலும் எது தனித்துவமானதோ, அதை மையமாகக் கொண்டு சுற்றுலா வலையமைப்பு ஒன்றை உருவாக்குவது, ஒவ்வொரு தீவிலும் என்னென்ன பாரம்பரிய உணவு வகைகள் கிடைக்குமோ அவற்றுக்குரிய உணவகங்களை உருவாக்குவது, தீவுகளை இணைக்கும் படக்குச்சேவைகளை அல்லது மிதக்கும் விருந்தகங்களை உருவாக்குவது. ஆனால் அத்திட்டத்தை வடமகாணசபை அதிகாரிகள் ஆர்வத்தோடு அணுகவில்லை என்று தெரிகிறது.

அதுபோலவே சில ஆண்டுகளுக்கு முன் மூன்று தீவுகளை மையமாகக் கொண்டு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் முதலில் சீனாவிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக அது இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளிலும் அவ்வாறு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்கள் நிறுவப்படும். ஆனால் இந்தியா அத்திட்டங்களைப் பொறுப்பெடுத்த பின் இலங்கை அரசாங்கம், நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான முட்டுக்கட்டைகள் உருவாக்கி வருவதாகச் ஒரு தகவல்.

தீவுகளை மையமாகக் கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட கடலட்டை பண்ணைகளும் விவாதப்பொருட்களாக மாறின. கடலட்டை, மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் தீவுப்பகுதியின் சனக்கவர்ச்சி அதிகரிக்குமா என்று தெரியவில்லை. ஆனால் புவிசார் அரசியல் போட்டிக்குள் தீவுகளும் சிக்குண்டு விட்டன என்பது மட்டும் தெரிகின்றது.

தீவுகளுக்கென்று தனித்துவம் உண்டு. அதில் முக்கியமானது, தீவுகளில் இருந்து எழுச்சிபெற்ற கவர்ச்சிமிகு வணிகப் பாரம்பரியம் ஆகும். தீவுகளைச் சேர்ந்த வணிகர்கள் முறைசார் படிப்புக்களுக்கூடாக வந்தவர்கள் அல்ல. ஆனால் பரம்பரை பரம்பரையாக திரட்டப்பட்ட பட்டறிவுக்கூடாக பெரு வணிகர்களாக எழுந்தவர்கள். தீவுகளுக்கேயான தனித்துவம்மிக்க, நூதனமான அந்தப் பட்டறிவை முறைசார் புலமைப் பரப்புக்குள் உள்வாங்கினால் என்ன? தீவுகளை மையமாகக் கொண்டு வணிகக் கல்லூரிகளை உருவாக்கினால் என்ன? எதைச் செய்தால் தீவுகளை சனக்கவர்ச்சி மிக்கவைகளாக மாற்றலாம்?

ஒவ்வொரு ஆண்டும் நயினாதீவை நோக்கி லட்சக்கணக்கானவர்கள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாரும் வில்வரத்தினத்தின் காற்று வெளிக் கிராமங்களை கடந்துதான் போகின்றார்கள்.

கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்திற்காக உளளூரில் வேலைக்கு ஆட்களைப் பெற்றுக்கொள்வதில் நிறையத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# காற்றுவெளிக் கிராமத்தில்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடைகள் இருந்ததாகக் கூறப்படுகின் றது. கோயிலைத் துப்புரவாக்குவதற்கு உள்ளூரில் ஆட்ளைப் பிடிப்பது கஷ்ட மாக இருந்ததாம். தீவுகளில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் நிலைமை அது தான். சுவாமி தூக்க ஆளில்லை. சில ஆண்டுகளுக்கு முன் புங்குடு தீவில் வில்வரத்தினத்தின் நினைவுநாளைக் கொண்டாடினார்கள். அம்பலவாணர் அரங்கில் கால்வாசிக்குக்கூட மக்கள் நிரம்பவில்லை. அதிலும் யாழ்ப்பாணத் தில் இருந்து வந்தவர்களே அதிகம். ஆனால் நீண்ட ஆண்டுகளின் பின் கண் ணகியம்மன் கோயிலை நோக்கி புங்குடு தீவு மீண்டும் திரண்டு வந்திருக் கிறது.

கண்ணகியம்மன் கோவிலுக்கு வேறு ஒரு முக்கியத்துவமும் உண்டு. 1971 ஆம் ஆண்டு அங்கு நடந்த சாதி எதிர்ப்புப் போராட்டம் பிரசித்தமானது. ஈழத் தமி ழர்கள் மத்தியில் தோன்றிய மிக முக்கிய மான சிந்தனையாளர்களில் ஒருவரும் வில்வரத்தினத்தின் ஆசிரியருமான மு.தளையசிங்கம் அப்போராட் டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்பட்டார். அங்குள்ள கிணற்றில் சாதிரீதியாகத் தாழ்த்தப்பட்டவர்கள் நீர் அள்ளுவதற்கு அனுமதிக்கப்பட வில்லை. அதை எதிர்த்துத் தளையசிங்கம் போராடினார்.

ஒருகாலம் சாதிரீதியாக தாழ்த்தப் பட்டவர்களை ஆலையங்களுக்குள் அனுமதிக்க மறுத்தவர்களுக்கும் குடி நீர்க்கிணறுகளைத் தடுத்தவர்களுக் கும் எதிராகப் போராட வேண்டியி ருந்தது. ஆனால் இன்றைக்கு அவ்வாறு தடுத்தவர்களின் ஆளில்லா வீடுகளில் சாதி ரீதியாக தாழ்த்தப் பட்ட மக்களே வந்து குடியிருக் கும் ஒரு நிலை. ஆனால் அந்த வீடுகளை அதில் இப்பொழுது குடியிருப்பவர்க ளுக்கு சொந்தமாக எழுதிக் கொடுப்ப தற்கு வீட்டின் உரிமையாளர்கள் தயா ரில்லை என்றும் சுட்டிக்காட்டப்படு கிறது.

அதேசமயம் ஊர்காவற்துறை கரம்பன் மேற்கில் புலம்பெயர்ந்த தமிழர் கள் இருவர் தமது காணிகளை 12 காணி யில்லாத குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். எனினும், பூதங் காக்கும் காணிகள் பலவற்றை அவ்வாறு கொடுப்பதற்கு மனமில்லாத ஒரு தொகுதியினர் பங்குத் தந்தையிடமும் ஆயர் இல்லத்திடமும் தமது காணி உறுதிகளை கொடுத்து வைத்திருப் பதாக ஒரு புலம்பெயர்ந்த தமிழர் குற்றஞ் சாட்டினார்.

ஒருபுறம் தமிழ்ச் சமூகத்தில் நிலமற்ற வீடற்ற மக்கள். இன்னொரு புறம் புதர் மண்டிக் கிடக்கும் பெரு மாளிகைகள். ஒருபுறம் தேவையோடு தவிக்கும் தாயக மக்கள். இன்னொரு புறம் தாயகத்தைப் பிரிந்த பிரிவேக் கத்தோடு காசை என்ன செய்வது என்று தெரியாமல் கொட்டிச் சிந்தும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம். நாட்டைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு நாட்டுக்கு எதையாவது செய்ய வேண் டும் என்று புலம்பெயர்ந்த தமிழர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அவர்களி டம் உள்ள அளவற்ற செல்வத்தையும் தாயகத்தில் காற்றுவெளிக் கிராமங்களின் தேவைகளையும் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களின்மூலம் இணைப்பதற்கு யார் உண்டு?

குறிப்பாக, புங்குடுதீவில் குடிநீர் ஒரு பிரச்சினை. ஒரு சிறிய குடிநீர்ச் சுத்திகரிக் கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கிட்டத்தட்ட 40 லட்சம்வரை தேவை என்று கணிப்பிடப்படுகிறது. கண்ணகி யம்மனுக்காக செலவழிக்கப்பட்ட தொகையோடு ஒப்பிட்டால் இது மிகச் சிறியது. கோவில் தூண் ஒன்றுக்காக காசு கொடுத்த எட்டுப் பேர் சேர்ந்தால் ஒரு நீர் விநியோகத் திட்டத்தை நிறுவ லாம்.

புங்குடுதீவு மருத்துவமனையில் இப் பொழுது மூன்று மருத்துவர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் சிங்கள வர். அவர் தான் பொறுப்பதிகாரி. அண்மை ஆண்டுகளில் அவ்வாறு சிங்கள மருத்து வர்கள் தீவுகளுக்கு நியமிக்கப்படும் ஒரு நிலைமை. சிங்கள மருத்துவர்கள்தான் அதற்குத் தயாராக இருப்பதாகக் கூறப்படு கிறது.

கணித விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்க ளுக்கு ஆசிரியர்கள் அங்கே குறைவு. பிள்ளை கள் யாழ்ப்பாணம் நகரத் துக்குத்தான் வர வேண்டும். அல்லைப்பிட்டியில் கிறீஸ்தவ திருச்சபையினரால் கட்டப்பட்ட ஒரு சர்வதேசப் பாடசாலை உண்டு. அது மதம் மாற்றும் நோக்கத்தோடு கட்டப் பட்டது என்று சில இந்துக் கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். அப்படி யென்றால் கோவில்களைப் புனரமைக்கும் காசில் பள்ளிக்கூடங் களைக் கட்டலாம். அறப்பணிகளைச் செய்யலாம். நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவலாம். தீவுகளின் சனக் கவர்ச்சியைக் கூட்டலாம்.

புலம்பெயந்த தமிழர்களையும் தாயகத்தையும் ஒருங்கிணைப்பது அல்லது தேவைகளையும் வளங்களை யும் ஒருங்கிணைப்பது என்பது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான். தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது சனத்திரட்சியை, இனத்திரட் சியைப் பாதுகாப்பதும் பெருக்கு வதுந்தான். ஊர்பற்று இருக்க வேண்டும். அது நல்லது. அதைவிட நல்லது, அந்த ஊர்ப்பற்றானது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இருப்பது.

## மழையால் பாதுகாப்பு சுவர் இடிந்து வீழ்ந்து வீடு சேதம்!



நுவரெலியா, ஜூலை 04

நுவரெலியா காவல்துறை பிரிவுக்குட்பட்ட ருவான்எலிய பிரதேசத்தில் தொடர்ச்சியான மழையால் வீடொன்றின் 15 அடி உயரம் கொண்ட பாதுகாப்பு கல்சுவர் இடிந்து வீழ்ந்த தில் இரண்டு அறைகள், மலசலகூடம் என்பன சேதமடைந்துள்ளன.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற் றுள்ள நிலையில் வீட்டில் இருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து மத்திய மலைநாட்டி லும் தொடர்ந்து மழையுடனான காலநிலை நிலவி வருகிறது.

இதேவேளை,தொடரும் மழையுடனான வானிலை காரணமாக, கொத்மலை நீர்த்தேக் கத்தின் இரண்டு வான்கதவுகள் நேற்று அதிகாலை முதல் திறக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் மழை பெய்யுமாயின், நீர்த்தேக் கத்தின் ஏனைய வான்கதவுகள் தானியக்க முறையில் திறக்கப்படும் சாத்தியம் உள்ளதால், அதன் அருகில் உள்ள மக்கள் மிகுந்த அவதான மாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

இதேவேளை, மழையுடனான வானிலை காரணமாக நுவரெலியா, கண்டி மற்றும் இரத் தினபுரி ஆகிய 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)







# கலைவாணி வித்தியாலய காணி விரைவில் விடுவிப்பு

## இராணுவத்தினர் இணக்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 04

**மட்டக்களப்பு குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலய காணி விடுவிப்பு தொடர்பிலான கள விஜயத்தின்போது பாடசாலைக்குரிய காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு குருக்கள் மடம் இராணுவ முகாம் அமைத்திருக்கும் எல்லைக்குமுள்ள குருக்கள்மடம் கலைவாணி வித்தயாலயத்திற்குச் சொந்தமான காணியை விடுவிப்பது தொடர்பாக ஆராயும் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது குருக்கள்மடம் கலைவாணி வித்தயாலயத்துக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மைதானத்தில் குருக்கள்மடம் இராணுவ முகாம் அமைத்திருக்கின்றமை தொடர்பில் தெரியப்படுத்தி இராணுவ முகாமை விடுவித்து அக்கட்டடங்கள் மற்றும் மைதானத்தை மீண்டும் பாடசாலைக்கு ஒப்படைப்பது சம்மந்தமாக கோவிந்தன் கருணாகரம் எம்.பியினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கலந்துரையாடப்பட்டமைக்கு இணங்க குறித்த இடத்திற்கு கோவிந்தன் கருணாகரம் எம்.பி உள்ளிட்ட அதிகாரிகள் குழு சென்று சம்பந்தப்பட்ட இராணவத்தினருடன் கலந்துரையாடி எட்டப்பட்ட தீர்மானங்கள் அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு ஆளுநரினால் விடுக்கப்பட்ட அறிவித்



லுக்கு அமைவாக குருக்கள் மடம் இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்துக்கு கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விஜயத்தில் எம்.பி உட்பட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேச செயலாளர், வலயக் கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை என்ற போதும் இரண்டாம் நிலை அதிகாரி அங்கிருந்தார். அவருடன் கலந்துரையாடியதற்கமைவாக ஓர் அறிக்கை தயாரிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இராணுவம் தற்போது அந்தப் பாடசாலை கட்டடங்கள் அடங்கிய 2.9 ஏக்கர் நிலப்பரப்பைப் பாவிப்பதற்கு மேலதிகமாக அரச காணி 5 ஏக்கரையும் பாவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே பாடசாலைக்குரிய கட்டடம் இருக்கும் காணியையும், மைதானத்தையும் விடுத்து ஏனைய 5 ஏக்கரையும் பாவிப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாததையடுத்து அவர்கள் பாடசாலைக்குரிய காணி, மற்றும் கட்டடங்களை விடுவிக்க நடவடிக்கையெடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு காணி விடுவிப்புக்குரிய தீர்மானம் நிறைவேற்றப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# விவேகானந்தா மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு கணினிகள்

மட்டக்களப்பு, ஜூலை 04

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான கணினிகள் கையளிக்கும் நிகழ்வு கல்லூரியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்முனை வடக்கு கல்வி கோட்டத்தின் மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரி மாணவர்களின் கணினி செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில் அதிபரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க 2030 செயற்திட்டக் குழுவின் அனுசரணையில் விவேகா பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக அவுஸ்திரேலியா நாட்டின் ஐட் ரேன் நிறுவனம் மற்றும் சமாரியன் கரங்கள் அமைப்பினால் கல்லூரி அதிபரிடம் ஐந்து கணினிகள் கையளிக்கப்பட்டன. (அ)



திருகோணமலை றோட்டரி கழகத்தின் 45 ஆவது தலைவராக. மருத்துவர் ச. சௌந்தரராஜன் பதவி ஏற்கும் நிகழ்வு டைக் வீதியில் உள்ள றோட்டரி அலுவலகத்தில் ஞாயிற்றுகிழமை இடம்பெற்றது

# தொழில் வழிகாட்டல் பயிற்சி கருத்தரங்கு

மட்டக்களப்பு, ஜூலை 04

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் யுதிகளுக்கான தொழில் வழிகாட்டல் ஒருநாள் பயிற்சி கருத்தரங்கு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

கரித்தாஸ் எகெட் நிறுவன சமாதான செயத்திட்ட இணைப்பாளர் ரெபின்ஸ்சன் ஒருங்கிணைப்பில் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஜேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தொழில் தேடுபவரின் தகைமைக்கேற்ப ஒரு தொழில் அல்லது தொழில் கல்வி சேவையைப் பெற்றுக் கொள்ளல் எனும் தலைப்பின் கீழ் இளைஞர் யுவதிகள் வலுவூட்டப்பட்டனர். (அ)

# போதைப் பொருள் விற்ற மூவர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 04

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட தந்தையையும் மகனையும் கைது செய்துள்ளதுடன் மற்றொருவரை ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்திருப்பதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ். ஏ.றஹீம் தெரிவித்தார்.

குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி றஹீம் தலைமையிலான பொலாஸ் குழுவினர் நடத்திய திடீர் சுற்றி வளைப்பின்போது புதிய காத்தான்குடி பஸ் டிப்போ வீதியில் 2120 மில்லி கிராம் ஹெரோய்னுடன் தந்தையும் 40 மில்லி கிராம் ஹெரோய்னுடன் மகனும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, கர்பலா பள்ளிவாயலுக்கருகில் 2960 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 35 வயது நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான மூவரும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் எனவும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இன்று கதிர்காமத்தில் தீர்த்தோற்சவம்

அம்பாறை, ஜூலை 04

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாவின் தீர்த்தோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ளது.

கடந்த ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆடி வேல்விழா கடந்த 15 தினங்களாக லட்சக்கணக்கான பக்தர்கள் சகிதம் சிறப்பாக நடைபெற்று வந்தது.

நேற்று இரவு கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர தலைமையில் பெரஹரா சிறப்பாக நடைபெற்றது.

அதேவேளை, உகந்தை மலை முருகனா லயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே. (அ)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் குறுங்கால கற்கை நெறிகள் ஆரம்பம்

அம்பாறை, ஜூலை 04

மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான மனித உரிமைகள் குறுங்கால பாடநெறிக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையினால் நடாத்தப்படும் மனித உரிமைகள் குறுங்கால சான்றிதழ் பாடநெறிக்கான



பிரியாவிடை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)



# வலதுசாரி மேயரின் வீடு மீது பிக்-அப் மோதித் தாக்குதல்!

## மனைவியும் குழந்தையும் காயம் பிரான்ஸ் அரசியல் மட்டம் அதிர்ச்சி

பாரிஸ், ஜூலை 04

பாரிஸ் நகருக்குத் தெற்கே அமைந்த லை-லே-ரோஸ் என்ற நகரத்தின் மேயர் வன்சென்ற் ஜோன்புருனின் இல்லத்தின் மீது பிக் அப் வாகனம் ஒன்றை மோதித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டுக்குத் தீ மூட்டப்பட்டும் உள்ளது.

ஞாயிறு நள்ளிரவு 01.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின் போது மேயர் வீட்டில் தங்கியிருக்க வில்லை. அவர் நகர சபையில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை கும்பல் ஒன்று தீப்பற்றும் திரவம் நிரப்பப்பட்ட வாகனத்தை வீட்டின் வாயில் கதவு மீது மோதிச் செலுத்தித் தாக்கியுள்ளது. வீட்டின் மீது வாண வெடிகளும் ஏவப்பட்டுள்ளன.

வீட்டில் அவரது மனைவியும் இரண்டு குழந்தைகளும் மட்டுமே உறக்கத்தில் இருந்துள்ளனர். பீதியடைந்த மனைவி குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வீட்டின் பின் பக்கமாக வெளியேற முற்பட்ட சமயம் காயமடைந்தார். பிள்ளைகளில் ஒருவருக்கும் காயம் ஏற்பட்டது. மேயர் வன்சென்ற் ஜோன்பிருன் நாட்டின் பழமைவாதக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர். அக்கட்சியின் பேச்சாளராகவும் விளங்குகிறார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் மீதான இத் தாக் குதல் அரசியல் மட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கட்சி வேறுபாடுகள் இன்றிக் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது.

தாக்குதலாளிகள் தேடப்பட்டு வருகின்றனர். அவர்கள் மீது கொலை முயற்சிக் குற்ற விசாரணை தொடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் நிலைவரம் தொடர்பாக அதிபர் மக்ரோன் பிரதமர் உட்பட ஏழு அமைச்சர்களுடன் இன்று முன்னிரவு எலிஸே மாளிகையில் ஆலோசனை நடத்தினார் என்று அறிவிக்கப்படுகிறது.

பாரிஸ் புற நகரங்களில் கடந்த சில தினங்களாக நீடித்த இளைஞர்களது வன்செயல்கள் மெல்லத் தணியத் தொடங்கியுள்ளன. பாரிஸ் செனித் இன்னிசை அரங்கில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற தென்னிந்திய இசையமைப்பாளர் இசைஞானி இளைய ராஜாவின் இசை நிகழ்ச்சியில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டனர்.

இளையராஜாவும் பிரபல இந்தியத் தமிழ்ப் பாடகர்களும் கலந்துகொண்ட அந்த மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி பாரிஸ் நகரின் 19 ஆவது நிர்வாகப் பிரிவில் லாவிலெத் பார்க்கில் அமைந்துள்ள செனித் இன்னிசை மண்டபத்தில் அரங்கம் நிறைந்த பார்வையாளர்களுடன் நடைபெற்றது.

பொதுமக்கள் பெரு மெடுப்பில் கூடுகின்ற பல இன்னி ச நிகழ்ச்சிகளும் பொது விழாக்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக ரத்துச் செய்யப்பட்டிருக்கின்ற கலவர சூழ்நிலையில் இந்த உள்ளரங்க இசை நிகழ்ச்சியைத் திட்ட மிட்டபடி நடத்துவதற்கு அனு மதி வழங்கப்பட்டிருந்தது. (அ)

# எப்போதும் ருவீற்றரில் இருக்காமல் குடும்பத்தோடு நேரம் செலவிடுங்கள்!

## எலென் மாஸ்க்கின் ஆச்சரிய அறிவிப்பு பதிவுகளைப் பார்க்க வரையறை விதிப்பு

லண்டன், ஜூலை 04

உலகெங்கும் ருவீற்றர் சமூக ஊடகத் இணையத் தளத்தின் செயற்பாட்டு வேகம் கடந்த சில தினங்களாக மந்தமடைந்திருப்பதால் பயனாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

என்ன நடந்தது என்று ருவீற்றர் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

பயனாளி ஒருவர் நாளொன்றுக்குப் பார்வையிடுகின்ற பதிவுகளது எண்ணிக்கையைத் தற்காலிகமாக வரையறை செய்வதாக ருவீற்றர் நிறுவனத் தின் உரிமையாளர் எலென் மாஸ்க் தெரிவித்திருக்கிறார்.

தரவுகளை அணுகுவது உச்ச அளவுக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்காகவே இந்த வரையறை என்று அவர் தனது ருவீற்றர் பதிவு ஒன்றில் விளக் கம் அளித்திருக்கிறார்.

சதா முழு நேரமும் டிஜிட்டல் திரைகளோடு இருக்காமல் வெளியே சென்று குடும்பத்த வர்களைச் சந்திப்பதை இது ஊக்குவிக்கும் என்று மற்றொரு பதிவில் பல்தேசிய வர்த்தக பில்லியனராகிய அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஸ்மார்ட் போன் மீதான ஆழ்ந்த மயக்கத்தில் இருந்து எழுந்திருங்கள், உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக அதிலிருந்து விலகி இருங்கள். பார்வை வரம்பை நான் நிர்ணயித்ததற்குக் காரணம், நாம் அனைவரும் ருவீற்றருக்கு அடிமையாகிவிட்டதால் அதிலிருந்து வெளியேற வேண்டும். நான் இங்கே உலகத்திற்கு ஒரு நல்ல செயலைச் செய்கிறேன்"

- இவ்வாறு எலென் மாஸ்க் தெரிவித்திருப்பது



பயனாளர்களுக்குப் பெரும் ஆச்சரியமளித்துள்ளது.

ருவீற்றர் தளத்தை அணுகுவதில் பெரும் நெருக்கடி காணப்படுவதாக உலகெங்கும் இருந்து முறைப்பாடுகள் வெளிவந்த நிலையிலேயே இத்தக வலை அவர் வெளியிட்டிருக்கிறார்.

செயற்கை நுண்ணறிவு செயலிகளை உருவாக்குவதற்காகப் பயனாளர் தரவுகளை அணுகுவதில் சமூக ஊடகப் பெரு நிறுவனங்கள் மத்தியில் கடும் போட்டி எழுந்துள்ளது.

பயனாளர்களது பழக்கவழக்கங்களைச் சேகரித்து செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை உருவாக்குவதற்காக மூன்றாவது தரப்பினர்ருவீற்றர் பயனாளர்களது தரவுகளைப் பெருமெடுப்பில் அணுகுவதைத் தடுப்பதையே இந்த நடவடிக்கை உள் நோக்கமாகக் கொண்டது என்று சொல்லப்படுகிறது.

(அ)

# சமூக வலைத்தள உடல்வலு பிரபலம் ஜோ லின்ட்னர் 30 வயதில் உயிரிழப்பு!

பேர்ளின், ஜூலை 04

30 வயதான சமூக வலைத்தள உடல்வலு பிரபலம் ஜோ லின்ட்னர் காலமானார். அவருக்கு அனீரிசிம் பாதிப்பு ஏற்பட்டது அவரது மரணத்திற்கு காரணம் என தெரிகிறது. இதனை அவரது காதலி சமூக வலைத்தளப் பதிவில் உறுதி செய்துள்ளார்.

ஜேர்மனி நாட்டை சேர்ந்த ஜோ லின்ட்னரை இன்ஸ்டாகிராம் தளத்தில் சுமார் 8.5 மில்லியன் பேர் பின்தொடர்ந்து வருகின்றனர். யூரியூப் தளத்தில் சுமார் 1 மில்லியன் பேர் அவரை பின் தொடர்ந்து வருகின்றனர். சமூக வலைத்தளங்களில் ஜோஸ்தெடிக்ஸ் என்ற பெயரில் இயங்கினார்.

உடல்வலு சார்ந்த ஆலோசனைகளை அவர் அதில் பகிர்ந்து வந்தார். இந்நிலையில், ஜூன் 30 அன்று அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் உயிரிழப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அவரது கழுத்து பகுதியில் வலி இருந்துள்ளது. அதனை அவரை சுற்றி இருந்தவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதன்



பின்னர் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு தான் அவரது உயிர் பிரிந்துள்ளது. அவர் மரணத்திற்கு காரணம் அனீரிசிம் பாதிப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரை சமூக வலைத்தளத்தில் பின்தொடர்ந்து வருபவர்கள், நண்பர்கள் என பலரும் அவருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் அவரது இளவயது மரணத்திற்கான காரணம் குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது. (அ)

# 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' இயக்குநருக்கு விருது வழங்கினார் பிரிட்டன் மன்னர் சார்ள்ஸ்!

லண்டன், ஜூலை 04

இந்தியாவில் தமிழகத்தில் நீலகிரியைச் சேர்ந்த பழங்குடியின வாலிபர்கள் 2 பேருக்கும், 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' ஆவணப்பட இயக்குநருக்கும் பிரித்தானிய மன்னர் சார்ள்ஸ் விருதுகளை வழங்கி மதிப்பளித்துள் ளார்.

பிரித்தானிய ராணி கமிலாவின் சகோதரரும், மறைந்த வன பாதுகாவலருமான மார்க் ஷண்டால் உருவாக்கப்பட்ட 'எலிபெண்ட் பேமிலி' என்ற சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆசிய காடுகளில் யானைகள் அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.

இந்நிறுவனம் ஆசிய காடுகளில் வனவிலங்குகள் மற்றும் காடுகளை பாதுகாப்பதில் சிறந்த பங்களிப்பை தரும் நபர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்த ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த 3 பேருக்கு 'எலிபெண்ட் பேமிலி' நிறுவனம் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது. லண்டனில் நடைபெற்ற விழாவில் மன்னர் 3ஆம் சார்ள்ஸ் மற்றும் ராணி கமிலா இந்த விருதுகளை வழங்கினர்.




இந்தியாவில் உள்ள 'ரியல் எலிபெண்ட் கலெக்டிவ்' என்ற தன்னார்வ நிறுவனம், இங்கிலாந்தின் 'எலிபெண்ட் பேமிலி' நிறுவனத்துடன் இணைந்து நீலகிரி மலைப்பகுதியில் அதிகம் காணப்படும் லந்தானா கேமரா என்ற உண்ணி செடியை கொண்டு முழு அளவிலான யானை சிலைகளை உருவாக்கி வருகிறது. பெட்டா குரும்பா பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் லந்தானா யானை சிலைகள் உருவாக்கப்படுகின்றன.

இந்த கைவினை பொருள்கள் சுற்றுச்சூழலில் இருந்து ஆக்கிரமிப்பு உயிரினங்களை அகற்றுவதுடன் வனத்தை சார்ந்துள்ள சமூகங்களுக்கு வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது. இந்நிலையில் லந்தானா யானை சிலைகளை உருவாக்கும் கைவினை கலைஞர்களின் பிரதிநிதிகளாக நீலகிரி மாவட்டம் கூடலூரைச் சேர்ந்த ரமேஷ் மாறன் (வயது 32), விஷ்ணு வர்தன் (29) இருவருக்கும் மதிப்பு மிக்க 'மார்க் ஷண்ட்' விருதை மன்னரும், ராணியும் கையளித்தனர்.

இந்த விழாவில் ஒஸ்கார் விருது பெற்ற 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' என்ற ஆவணப்படத்தை இயக்கிய நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் இயக்குனரான கார்த்திகி கொன்சால்வஸ் 'தாரா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவருக்கு யானை சிலை வழங்கப்பட்டது.

முதுமலையில் உள்ள தெப்பாக்காடு யானைகள் முகாமை சுற்றி பயணிக்கும் 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' ஆவணப்படம் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையே உள்ள ஆழமான தொடர்பை மனதைக் கவரும் வகையில் வழங்கியதன் மூலம் சிறந்த ஆவண குறும்பட பிரிவில் ஒஸ்கார் விருதை வென்றது குறிப்பிடத்தக்கது. (அ)



# உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது இலங்கை அணி!

புலவாயோ, ஜூலை

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடருக்கான தகுதி சுற்று தொடரின் சுப்பர்- 6 சுற்றில் சிம்பாப்வே அணியை 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது இலங்கை அணி.

இதன் மூலம் இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளது இலங்கை.

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் வரும் ஒக்ரோபர் 5 முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறுகிறது. இந்தத் தொடரில் 10 அணிகள் கலந்து கொள்கின்றன. 8 அணிகள் நேரடியாக கலந்துகொள்ள தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள இரு அணிகள் தகுதி சுற்றின் வாயிலாக தெரிவு செய்யும் வகையில் நடத்தப்பட்டு வரும் இந்த தொடரில் இருந்து முதல் அணியாக இலங்கை தகுதிபெற்றுள்ளது.

புலவாயோ மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 165 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை விரட்டியது. முதல் விக்கெட்டுக்கு 103 ஓட்டங்கள் இணைப் பாட்டம் அமைத்தனர் கருணரத்ன மற்றும் நிஷங்கா. கருணரத்ன 30 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் வந்த குசல் மெண்டிஸ், 25 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த பதும் நிஷங்க 102 பந்துகளில் 101 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். 33.1 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்கள் எடுத்தது இலங்கை. 101 பந்துகள் எஞ்சியிருக்க அந்த அணி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் வரும் 9ஆம் திகதி நடைபெறும் தகுதி சுற்று தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை விளையாடுகிறது.

# ஆஷஷ் தொடரிலிருந்து விலகினார் நதன் லயன்

லோர்ட்ஸ், ஜூலை 04

ஆஷஷ் தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார் அவுஸ்திரேலியாவின் நதன் லயன்.

இரண்டாவது டெஸ்டின் 2ஆம் நாள் ஆட்டத்தில் பந்தை பிடிக்க ஓடியபோது நாதன் லயனுக்கு அவரது வலது காலின் பின்புறம் காயம் ஏற்பட்டது. காயத்துடனும் துடுப்பெடுத்தாடிய லயன் 13 பந்துகளை சந்தித்த அவர் 4 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவர் துடுப்பெடுத்தாடியதால் ஆஸ்திரேலிய அணிக்கு கூடுதலாக 15 ஓட்டங்கள் கிடைத்தது.

இந்நிலையில், காயம் காரணமாக லயன் விலகியுள்ளார். அவுஸ்திரேலிய அணிக்காக தொடர்ந்து 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வந்த லயன் 101ஆவது போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

லயனுக்கு பதிலாக இன்னும் யாரையும் அணியில் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஆஷஷ் டெஸ்ட் தொடர்

# இரண்டாவது போட்டியிலும் வாகைசூடியது அவுஸ்திரேலியா!

லோர்ட்ஸ், ஜூலை 04

நடப்பு ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொட ரின் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியை 43 ஓட்டங்களால் வென்றுள்ளது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணிக் காக அபாரமாக துடுப்பெடுத்தடி 155 ஓட்டங்களை குவித்தார் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ். இருந்தும் அவரால் தனது அணியை வெற்றி பெற செய்ய முடிய வில்லை.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந் தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சைத் தெரிவு செய்தது. முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 416 ஓட்டங்கள் குவித்தது. இங்கி லாந்து அணி 325 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸை 91 ஓட்டங்கள் முன்னிலை யுடன் அவுஸ்திரேலியா தொடங்கியது. 279 ஓட்டங் களுக்கு அந்த அணி அனைத்து விக்கெட் களையும் இழந்தது.



371 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இங்கிலாந்து அணி விரட்டியது. 45 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் இழந்து தடுமாறியது. ஜாக் கிராவ்லி, போப், ஜோ ரூட் மற்றும் ப்ரூக் ஆகியோர் சொற்ப ஓட் டங்களுடன் வெளியேறினர். தொடக்க ஆட்டக் காரர் பென் டக்கெட் மற்றும் அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் இணைந்து 132 ஓட்டங்களுக்கு இணைப் பாட்டம் அமைத்தனர். டக்கெட், 83 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த பெயர்ஸ்ரோ 10 ஓட்டங்களில் வெளியேறினார். பிரொட் உடன் இணைந்து 108 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ஸ்ரோக்ஸ். 214 பந்துகளை எதிர்கொண்ட அவர் 155 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அப்போது 301 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்திருந்தது இங்கிலாந்து. அதன் பின்னர் 26 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்து எஞ்சிய 3 விக்கெட்களையும் இழந்தது. அதன் மூலம் 43 ஓட்டங்களில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க், பேட் கம்மின்ஸ் மற்றும் ஹேசல்வுட் ஆகியோர் தலா மூன்று விக்கெட்களை வீழ்த்தி இருந்தனர். கிறீன் ஒரு விக்கெட்டை கைப்பற்றி இருந்தார்.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 2-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கிறது. இந்தத் தொடரின் மூன்றாவது போட்டி வரும் 6ஆம் திகதி தொடங்குகிறது. முதல் இன்னிங்ஸில் சதம் விளாசிய ஸ்ரீவ் ஸ்மித் இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை வென்றார். (ஐ)

# ஐ. பி. எல்லில் விளையாடாதிருக்க வீரர்களுக்கு இழப்பீடு வழங்கினோம்!

## பங்களாதேஷ் கிரிக்கெட் சபை

বাংলাদেশ
Bangladesh Cricket Board

டாக்கா, ஜூலை 04

2023 ஐ. பி. எல். தொடரில் விளையாடாமல் இருக்க பங்களாதேஷ் வீரர்கள் ஷகிப் அல் ஹசன், லிற்றன் தாஸ், டஸ்கின் அஹமது ஆகியோர்களுக்கு மொத்தமாக 65 ஆயிரம் டொலர்கள் இழப்பீடு கொடுக்கப்பட்டதென பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஷகிப் அல் ஹசன் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்காக 2023இல் ஒப்பந்தமாகி பின்னர் விலகினார். இதேபோல லிற்றன் தாஸ/ம் கொல்கத்தா அணிக்காக ஒப்பந்தமானார். அயர்லாந்துக்கு எதிரான பங்களாதேஷ் போட்டி இருந்ததால் ஒரேயொரு போட்டியுடன் நாட்டுக்கு திரும்பினார்.

டஸ்கின் அஹமது ஐ. பி. எல். ஏலத்தில் தெரிவாகவில்லை. இருப்பினும் மாற்று வீரராக அவரை ஐ. பி. எல். அணிகள் அணுகின என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. பங்களாதேஷை சேர்ந்த முஷ்தபிஹூர் ரஹ்மான் மட்டுமே டில்லி அணிக்காக 2 போட்டிகள் விளையாடினார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் இயக்குநர் ஜலால் யூனுஸ் நேர்காணல் ஒன்றில் கூறியவை வருமாறு,

பங்களாதேஷ் வீரர்கள் இழப்பீடு கேட்கவில்லை. ஆனால், எங்களால் முடிந்த சிறிய உதவியாக இதை செய்தோம். நாட்டின் அணிக்காக விளையாடுவது என்பது நிபந்தனைகளற்ற ஒன்றாகவே பார்க்கிறோம். இருப்பினும், எங்களின் சபை அந்தந்த நேரத்துக்கு ஏற்றது போல வீரர்களின் நலனும் எங்களுக்கு முக்கியமானதாக இருப்பதால் அப்படி செய்தோம் - என்றார். (ஐ)



# சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்த இடத்தில் ஸ்மித்!

லோர்ட்ஸ், ஜூலை 04

99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பிரபல அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஸ்ரீவ் ஸ்மித் 9,113 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில், 32 சதங்கள், 37 அரைச்சதங்கள் அடங்கும். ஐ. சி. சியின் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் 6ஆவது இடத்தில் உள்ளார்.

ஆஷஷ் தொடரிலும் சிறப்பாக விளையாடி வருகிறார். தொன் பிராட்மனுடன் ஒப்பிடும் அளவுக்கு திறமையான துடுப்பாட்ட வீரர். சமீபத்தில் ஸ்ரீவ் ஸ்மித், டெஸ்ட் போட்டிகளில் ஆயிரம் பௌண்ட்ரிகள் அடித்து சாதனை படைத்தார்.

இந்நிலையில் 2ஆவது ஆஷஷ் போட்டியில் ஸ்ரீவ் ஸ்மித் ஆட்ட நாயகன் விருது பெற்றார். இதன் மூலம் டெஸ்டில் 13 முறை ஆட்ட நாயகன் விருதுகளை பெற்று சச்சினுக்கு அடுத்த இடத்தில் உள்ளார். சச்சின் 200 போட்டிகளில் விளையாடி 14 முறை ஆட்ட நாயகன் விருதுகளை பெற்றதை ஸ்மித் 99 போட்டிகளிலே 13 முறை எடுத்து அசத்தியுள்ளார்.

மேலும், இங்கிலாந்துக்கு எதிராக மட்டும் 34 போட்டிகளில் 8 முறை ஆட்ட நாயகன் விருது பெற்று ஸ்மித் அசத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக முறை ஆட்ட நாயகன் விருது பெற்றவர் ஜக் கலிஸ் (23) என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மருந்துகளால் மரணங்கள் உயர்வு விசாரிக்க சுயாதீன குழு அவசியம்

## ஒன்றிணைந்த தொழில்சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 04

**உள்நாட்டில் தயாரிக்கப்படும் மருந்துகளாலேயே அண்மைக்காலமாக மரணங்கள் நிகழ்கின்றன. சில சிகிச்சை முறைகளும் இதில் தாக்கம் செலுத்துகின்றன. இந்த விடயம் குறித்து விசாரிக்க சுயாதீன விசாரணை ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும் என்று ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.**

கடந்த வாரம் ராகம மருத்துவமனையில் 23 வயது பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நோயெதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்துவதை விலக்கிக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அனைத்து மருத்துவமனைகளையும் கேட்டுள்ளது.

ராகம மருத்துவமனையில் தடுப்பூசி செலுத்தப்பட்டதை தொடர்ந்து 23 வயது இளம் தாயார் ஒருவர் உயிரிழந்தார். கடந்த ஜூன் 27ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண்ணே உயிரிழந்தார்.

அவருக்கு வழங்கப்பட்ட தடுப்பூசி மருந்து ஒவ்வாமையே அவரின் மரணத்துக்கு காரணமாக இருக்கலாம் என மருத்துவ ஆய்வக அறிவியல் கல்லூரி தெரிவித்துள்ளது. அவருக்கு தடுப்பூசி மூலம் வழங்கப்பட்ட நோயெதிர்ப்பு மருந்தின் ஒவ்வாமையே அவரின் மரணத்துக்குக் காரணம் என சந்தேகம் நிலவுவதாக ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட மருந்தால் கடும் ஒவ்வாமை ஏற்படுகின்றது என கடந்தகாலங்களில் முறைப்பாடுகள் வெளியான போதிலும் வழமையான ஒவ்வாமை என அந்த முறைப்பாடுகள் நிராகரிக் கப்பட்டது. இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சரை கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தாயாரான ஜாஎல வடக்கு பதகமவை சேர்ந்த 23 வயது பெண்ணே உயிரிழந்தார். அவரின் நோயை குணப்படுத்துவதற்காக தடுப்பூசி மூலம் வழங்கப்பட்ட நோயெதிர்ப்பு மருந்தே இதற்கு காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

சில மருத்துவகிசிச்சைகளும் இதற்கு காரணம் எனவும் அவர் கூறியுள்ளார். ஆனால், இவை மறைக்கப்படுகின்றன - வழமையானவை என நிராகரிக்கப்படுகின்றன. இது தொடர்பாக சுயாதீன விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

# மகனுக்காக தாமரை மலர் பறிக்க சென்ற தந்தை பலி!

புத்தளம், ஜூலை 04

மகனின் வைத்திய தேவைக்காக தாமரை பூ பறிக்க சென்ற தந்தை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புத்தளம் - நவகத்தேகம - கொங்கடவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தை சேர்ந்த 60 வயதான தென்னகோன் முதியன்சலாகே சிறிசேன என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரின் ஒரே பிள்ளையான 25 வயது மகன் அடிக்கடி நோய்வாய்ப்படுவதால், உள்ளூர் வைத்தியர் ஒருவரின் ஆலோசனையில் தாமரை மலர்களைப் பறிக்கச் சென்ற போதே சேற்றில் சிக்கி அவர் உயிரிழந்தார். (ஐ)

# கடல் அலை இழுத்துச் சென்ற பேரனும் பாட்டனும் மரணம்!

புத்தளம், ஜூலை 04

கடல் அலை இழுத்துச் சென்ற பேரனும் அவரை காப்பாற்ற முயன்ற பாட்டனும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் புத்தளம் இலந்தையடி பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற இருவரே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

மதுரங்குளி - ஹிதாயத் நகரை சேர்ந்த கச்சு முஹமது சஹீத் (வயது 60) மற்றும் அஜ்வாத் சஹீர்கான் (வயது 22) ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று இளைஞர்கள் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இதனை அவதானித்த இளைஞர்களின் பாட்டன் அவர்களை காப்பாற்ற முயன்றார். இருவரை காப்பாற்றி கரையில் விட்டு விட்டு மற்றொருவரை காப்பாற்ற முயன்றபோது இருவரும் அலையில் அடித்து செல்லப்பட்டனர்.

மீட்பு முயற்சியின் பின்னர் இருவரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. (ஐ)

# ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசாங்கத்தை உருவாக்குவோம்

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, ஜூலை 04

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். தேர்தல் ஊடாக ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகுவிரைவில் தோற்றுவிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கெஸ்பேவ தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், "நாட்டு மக்கள் மத்தியில் ராஜபக்ஷர்கள் தொடர்பில் நல்லதொரு நிலைப்பாடு காணப்படுகிறது. 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த அரசாங்கத்தையே மகிந்த ராஜபக்ஷ நல்லாட்சி அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

நல்லாட்சி அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவது குறித்து அவதானம் செலுத்தாமல் ராஜபக்ஷர்களை பழிவாங்குவது குறித்து அவதானம் செலுத்தியது. ராஜபக்ஷர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், சுமத்தப்பட்ட எந்த குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை.

ராஜபக்ஷர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் எந்த குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் சொத்துகள் பதுக்கி வைத்துள்ளார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

அரசியல் பிரசாரத்துக்காகவே ராஜபக்ஷர்கள்மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. 2019ஆம் ஆண்டு பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. ஒரு தரப்பினரின் தவறான ஆலோனைகளால் அரசாங்கம் குறுகிய காலத்துக்குள் பலவீனமடைந்தது.

பொருளாதார பாதிப்பு அரசியல் நெருக்கடியை தோற்றுவித்தது. பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். அரசியல் ரீதியில் பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சரியானது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கட்சி என்ற ரீதியில் சிறந்த முறையில் போட்டியிடுவோம். தேர்தல் ஊடாக ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகுவிரைவில் தோற்றுவிப்போம் - என்றார். (ஐ)

### எனது கருத்துக்கு எதிராக நீதிமன்று சென்றால்

# புத்தகத்தில் இல்லாத விடயங்களை ஆதாரத்துடன் வெளிப்படுத்துவேன்!

## விமல் வீரவன்ஸ எம். பி.

கொழும்பு, ஜூலை 04

அறகலய - அமெரிக்கா தொடர்பில் நான் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக சவேந்திர சில்வா நீதிமன்றம் சென்றால் புத்தகத்தில் இல்லாத பல விடயங்களை ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவேன். முடிந்தால் அவர் வழக்குத் தாக்கல் செய்யட்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

குருவிட்ட பகுதியில் நடைபெற்ற மேலவை இலங்கை சபை கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

69 இலட்சம் மக்களின் ஆணையை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறோம் என குறிப்பிடும் தகைமை சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது. பெரமுன நாட்டு மக்களுக்கு வழங்கிய ஆணையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலினப்படுத்தியுள்ளார். தாம் அரசியல் செய்வதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்தார் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது முட்டாள்தனமானது.

பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பலவீனப்படுத்தினார். மக்களின் தன்னிச்சையான போராட்டத்தை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்தினார். பொதுஜன பெரமுனவின் எதிர்கால நிலைமை கவலைக்குரியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு என்ற பெயரில் நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளை அவர் முன்னெடுத்துள்ளார். நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலாபமடையும் டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை பிரித்தானியாவில் வாழும் அல்லிராஜாவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான சந்திப்புக்களில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இது முற்றிலும் முறையற்றது. பெரமுனவினரும் கொள்கை இல்லாமல் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

அறகலய (போராட்டம்) அமெரிக்காவுக்கு இடையிலான தொடர்பு குறித்து நான் வெளியிட்ட ஒன்பதில் மறைந்த கதை புத்தகத்தால் தனக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா எனக்கு அறிவித்துள்ளார்.

காலி முகத்திடல் களத்தை அடியொற்றி செய்த 'டீல்'களை ஆதாரபூர்வமாக என்னால் வெளிப்படுத்த முடியும். புத்தகத்தில் இல்லாத பல விடயங்களை ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவேன் முடிந்தால் சவேந்திர சில்வா வழக்கு தாக்கல் செய்யட்டும் - என்றார். (ஐ)

# 48 மணி நேரத்தில் ஐவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 04

நேற்று திங்கட்கிழமை காலை 08.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 48 மணி நேரத்தில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நீரில் மூழ்கி ஐந்து மரணங்கள் பதிவாகியுள்ளன.

நிட்டம்புவ, அத்தனகல்லே ஓயாவில் குளித்துக் கொண்டிருந்த 21 வயதுடைய பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இதேவேளை, நீர் கொழும்பை சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவர் நேற்று மாலை சிலாபம் தெதுறு ஓயாவில் குளித்துக் கொண்டிருந்த போது உயிரிழந்தார்.

புத்தளம் - ஆலங்குடா கடலில் நேற்று மாலை குளித்த இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு - கல்குடா - பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற 29 வயதுடைய இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு



## தேர்தல்...

பின்னரே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தங்கள் கோரிக்கைகள் முன்வைக்கப்படும் என்றும் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

## மக்கள்...

உள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சீனித் தொழிற்சாலை தொடர்பில் நான்காவது தடவையாக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. ஆனாலும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை.

நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. முதலீட்டாளர்கள் இன்னும் தமது கருத்துக்களை சொல்லவில்லை. ஆனால், பலர் அதில் பெரிதும் விருப்பம் தெரிவிக்கவில்லை . சிங்கள குடியேற்றம் வரும் எனவும், சீனா முதலீடு எனவும் கூறுகிறார்கள். எம்மைப் பொறுத்த வரை தமிழீழ விடுதலை இயக்கம் சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்கமாட்டோம். இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சீனா முதலீட்டை எதிர்ப்போம். நாம் ஒரு போராட்ட இயக்கம். நிச்சயமாக சிங்கள குடியேற்றங்களையும் எதிர்ப்போம்.

சீனித் தொழிற்சாலை முறையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், வவுனியா மக்களோ அல்லது வவுனியாவில் உள்ள அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கருத்து சொல்லவில்லை. வவுனியாவுக்கு வரும் முதலீடு என்ற அடிப்படையில் எங்கள் மக்களின் கருத்துகளையும், இங்குள்ள அரசியல் வாதிகள், பொது அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோரின் கருத்துகளையும் பெற்ற பின்தான் இங்கு கொண்டு வருவதா இல்லையா என முடிவெடுப்போம்.

ஆகவே, தயவு செய்து யாரும் தேவையில்லமால் தலையிட வேண்டாம். சீனித் தொழிற்சாலையால் சிங்கள குடியேற்றம் வரும். சீனா வரும் என நிரூப்பிக்க முடிந்தால் - நிரூப்பிக்கவும். இந்தத் தொழிற்சாலை தாய்லாந்து நிறுவனத்தின் முதலீடு. இதில் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு எந்தப் பங்கும் இல்லை. இது தென்னிலங்கைக்கு செல்வதற்கான வாய்ப்பை தடுத்து நிறுத்தி வடக்குக்கு கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியே. இதற்கான பங்காளிகளாக நாம் இருக்கப் போவதில்லை.

முதலீட்டாளர்களை கொண்டு வருவதற்கான ஒரு செயல்பாட்டு பங்காளர் இல்லை. மக்களின் நலன், விவசாயிகளின் நலன் என்பன பற்றி கவனம் செலுத்தி வவுனியா மக்களோடு கலந்தாலோசித்து எமது கருத்தை சொல்வோம். வவுனியா மக்கள் விரும்பவில்லை என்றால் சிங்கள இடத்துக்குப் போகட்டும். மக்கள் அபிப்பிராயம் பெற்றுத்தான் நாம் முடிவெடுப்போம்.

எங்களைப் பொறுத்தவரை எமது தேசத்தில் முதலீடுகள் நடைபெற வேண்டும். ஆகவே, இதில் முதலீட்டை பார்ப்பதை விட்டுவிட்டு கனவுகளோடு பார்க்க வேண்டாம். ஆதாரம் இல்லாத கருத்துக்களை கூற வேண்டாம். வவுனியா மக்கள் ஆதரவு தந்தால் கொண்டு வர முயற்சி செய்வோம். அவர்கள் வேண்டாம் என்றாம் திருப்பி அனுப்புவோம். தமிழீழ விடுதலை இயக்கம் முதலீட்டை கொண்டு வர முயற்சிக்கின்றது என்பதற்காக சிலர் இதை எதிர்க்கிறார்கள். இது எங்களின் ஒரு முயற்சி அவ்வளவுதான். இதை பற்றி யாரும் கவலைப்பட தேவையில்லை - என்றார். (ஐ)

## தையிட்டி...

நிலையிலேயே, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நான்காம் கட்டமாக ஆரம்பமான தொடர் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமை மாலை-05.45 மணியுடன் நிறைவடைந்தது.

இதனிடையே, விகாரைக்கு அண்மையாக முன்னர் போராட்டம் நடத்த இடமளித்த காணியின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப் பட்டு கடுமையாக அச்சுறுத்தப்பட்டிருந்தார். இந்தநிலையில், விகாரை அமைந்துள்ள வீதியின் அருகேயுள்ள காணியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரண்டாவது நாளான நேற்று திங்கட்கிழமை காலை முதல் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த சமயத்தில், விகாரைக்குச் செல்லும் அதே வீதியின் வலது பக்கத்தால் குறித்த விகாரைக்கு இராணுவ வாகனங்கள் செல்வதை அவதானித்த போராட்டக் காரர்களில் ஒருபகுதியினர் திடீரென அங்கிருந்து பேரணியாகச் சென்று வீதியோரமாக புதிதாகப் போராட்டக் களத்தை ஆரம்பித்து போராட்டத்தை நடத்தினர்.

அந்த இடத்துக்கு சென்ற பொலிஸார் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டனர். இதனால், போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து, "பொலிஸ் அராஜகம் ஒழிக!", எனப் போராட்டக்காரர்கள் உரத்துக் குரலெழுப்பியதையடுத்து பொலிஸார் போராட்டக்காரர்களுடன் முரண்படுவதைக் கைவிட்டு அங்கிருந்து அகன்றனர்.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் இரு இடங்களில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பு...

உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார். இதேபோல் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு சாதகமான முறையில் முகம்கொடுத்து சுமூகமான நிலைமைகளை உருவாக்கியுள்ளது. கடந்த ஜூன் 20 ஆம் திகதி வெளியான சீன புளூாம் பேர்க் பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

"கடந்த காலத்தில் இலங்கையில் பணவீக்கம் 80மூ ஆக காணப்பட்டது. நாடு என்ற வகையில் அது மிகவும் கடினமாக நிலைமையாகும். அந்த நேரத்தில் ரூபாயின் பெறுமதியும் பெருமளவில் வீழ்ச்சி கண்டது.

பாதாளத்தில் விழுவதற்கு தயார் நிலையிலிருந்த பொருளாதாரமே எமக்கு கிடைத்தது. அதனைத் தடுக்க முற்படாமல் இருப்பதே பெரும் பாதிப்பாகும். இதனைத் தடுக்க அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவினங்களின் அடிப்படையில் கட்டணங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நெருக்கடி நிலையிலும் பணவீக்கத்தை அரசு வெற்றிகரமாகக் கட்டுப் படுத்தியுள்ளது.

அரசாங்கத்திடம் 2 கோடி அமெரிக்க டொலர்கள் மாத்திரமே இருந்தன. அதனாலேயே நாடு வங்கு ரோத்து நிலைமை அடைந்து விட்ட தாக அறிவிக்கப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியில் 128 சதவீத கடனை நாடு கொண்டுள்ளது. 2032ஆம் ஆண்டளவில் அதனை 95வீதமாகக் குறைக்க வேண்டிய சவாலான நிலைமை காணப் படுகின்றது.

அரசாங்கத்தின் இலக்குகளை அடைய, கடனை குறைக்க வேண்டும். வருமானத்தில் இருந்து கடனை செலுத்தும் நிலைக்கு நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமாகும். அதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# வழிகேட்பது போல் நடித்து முதியவரிடம் பணம் வழிப்பறி!

யாழ்ப்பாணம், ஜூலை 04

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வழி கேட்பது போல் பாசாங்கு செய்து முதியவரிடமிருந்து ஒருதொகைப் பணத்தைக் பறித்து சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் - பலாலி வீதியில் நேற்று முன்தினம் மதிய வேளை இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தேவை நிமித்தம் வயாவிளானிலிருந்து திருநெல்வேலி நோக்கித் சைக்கிளில் சென்ற முதியவரிடம் தங்கள் முகங்களை கறுப்புக் கண்ணாடி கொண்ட தலைக்கவசத்தால் மூடி மறைத்தவாறு பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரிடம் வழிகேட்பது போல் கேட்டுள்ளனர்.

அவர்களின் நடத்தையில் முதியவருக்கு சந்தேகம் எழுந்த நிலையில், அவரின் சேர்ட் பொக்கெற்றிலிருந்த பணத்தை பறித்துக்கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள வாகனங்கள் பழுது பார்க்கும் நிலையமொன்றில் ஊழியராகப் பணி செய்யும் திருநெல்வேலியைச் சேர்ந்த 66 வயதான முதியவரிடமே இவ்வாறு பணம் வழிப்பறி செய்யப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது.

(ஐ)

## மே 09...

அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஒருபோதும் உண்மையாகிவிடாது. முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு காலம் பதில் சொல்லும் என்ற நம்பிக்கை உள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காக அரசியல் கொள்கைகளை புறக்கணித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். நாடு என்ற ரீதியில் பெரும் சவால்களை வெற்றிக் கொண்டுள்ளோம். தேசிய கடன் மறுசீரமைப்பு சிறந்த ஆரம்பமாகும்.

தேசிய கடன் மறுசீரமைப்பு எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது. சர்வதேச நிதி மற்றும் நீதி நிறுவனங்களின் ஆலோசனைகளுடன் வெளிநாட்டு அரச முறை கடன்களும் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும். பொருளாதாரம் ஸ்திரமடைந்ததன் பின்னர் அவரவர் தமக்கு ஏற்றால்போல் அரசியல் செய்து கொள்ளலாம்.

பொருளாதார பாதிப்பை முன்னிலைப்படுத்தி கடந்த ஆண்டு மிலேச்சத்தனமான சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றன. கடந்த ஆண்டு மே 09ஆம் திகதி காலிமுகத்திடல் வன்முறை சம்பவத்தை தொடர்ந்து மக்கள் பிரதிநிதி ஒருவர் பகிரங்கமாக படுகொலை செய்யப்பட்டார். 70இற்கும் அதிகமான அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த பயங்கரவாத சம்பவம் தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நிறுவாமல் இருப்பதையிட்டு அரசாங்கம் என்ற ரீதியில் வெட்கமடைகிறோம் - என்றார்.

(ஐ)

## கோட்டாபய...

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் ஆட்சியில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத் திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியிருந்தேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ 2022 ஆம் ஆண்டில் அனைத்து கட்சிகளினதும் தலைவர்களை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்திருந்தால் இறுதியில் ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அந்தச் சந்திப்பை புறக்கணித்திருந்தன. நானும், ஆர்.சம்பந்தனும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வும் அந்த சந்திப்பில் கலந்து கொண்டு பிரச்னைகளைத் தீர்ப்பதற் கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தோம்.

எவ்வாறாயினும் மே 09 நிகழ்வின் பின்னர் நாம் அனைவரையும் ஒன்றிணைக்க முற்பட்டோம். பிரதமர் பதவியைப் பொறுப் பேற்காவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி எங்களுடைய வேலைத்திட்டங் ளுடன் இணைந்து கொள்ளும் என எதிர்பார்த்த போதும் அது நடக்கவில்லை. அதன் பின்பே தற்போதைய ஆளும் தரப்பை கட்டமைத்து எமது பணிகளை ஆரம்பித்தோம்.

நான் ஜனாதிபதியாகவும், பிரதமராக தினேஷ் குணவர்த்தனவும் பொறுப் பேற்றுக்கொண்ட அரசாங்கத்தின் விவசாய அமைச்ச ராக மகிந்த அமரவீர தெரிவு செய்ய ப்பட்டார். விவசாயம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டும் முடங்கிக் கிடந்த காலத்திலேயே அவர் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொண்டார். அவரால் உணவு பாதுகாப்பை ஏற்படுத்த முடிந்தது.

தற்போது நாம் விவசாயத்தை முன்னேற்ற வேண்டிய கட்டாயத் தில் இருக்கின்ற அதேநேரம், ஏற்று மதியை மையப்படுத்திய விவசா யத்தை வலுப்படுத்த வேண்டும். இதுவரையில் நாம் நமக்கு அவசியமான உணவு உற்பத்தியினை மாத்திரமே மேற்கொண்டிருந்தோம். எதிர்வரும் நாட்களில் உலகத்தின் உணவுத் தேவைக்கு அவசியமான உற்பத்திகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்காகவே விவசாய நவீனமயப்படுத்தல் என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

ஆளும் தரப்பில் இருந்தாலும் எதிர் தரப்பில் இருந்தாலும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் நாட்டு மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். அதனை விடுத்து போலியான தர்க்கங்களை முன்வைப்பதால் பயனில்லை. அந்த முயற்சியில் எதிர்க்கட்சி பல தடவைகள் தோற்றுப்போயுள்ளது.

சபாநாயகருடன் கலந்துரையாடி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேலும் பல பொறுப்பக்களை கையளிக்க நான் தயாராகவே உள்ளேன். தற்போதும் அவர்கள் செயற்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எதிர்வரும் நாட்களில் வரவு - செலவுத் திட்ட பணிமனை திறக்கப்படவுள்ளதால் மேலும் பல பொறுப்புக்கள் உருவாகும். அதனால் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள் எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு பாதிப்பு ஏற்பட நாம் இடமளியோம்." என ஜனாதிபதி உறுதியளித்தார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu

# மக்களின் விருப்பத்தை மதிக்காத சர்வாதிகார ஆட்சியே நடக்கிறது!

## மன்னாரில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

மன்னார், ஜூலை 04

**இன்று நாட்டில் மக்களின் விருப்பங்களுக்கு முன்னுரிமையளிக்காது சர்வாதிகார ஆட்சியே முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



அத்துடன், நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர , தேசிய சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்று அதன் ஊடாக பணத்தைப் பெற்று உணவுண்ண வேண்டும் என்பதை ஊக்குவிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஆராதனையின்போது இவ்வாறு தெரிவித்தார். மேலும்,

தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலத்துக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 120 பேர் மாத்திரமே விருப்பம் தெரிவித்துள்ளனர். ஏனையோர் முடியாது என்றும் , சிலர் எதுவுமே தெரிவிக்காமலும் பின்வாங்கியுள்ளனர். எனவே குறித்த சட்ட மூலம் பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளின் விருப்பத்துடன் குறித்த சட்ட மூலம் நிறைவேற்றப்படவில்லை.

இந்த சட்ட மூலத்தின் ஊடாக மக்களின் பணத்தை தனது விருப்பத்துக்கேற்ப பயன்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தலில் போட்டியிட்டால் எவருக்கும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். மக்களின் விருப்பத்துக்கு முன்னுரிமையளிக்காத, ஜனநாயகம் முடக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியே தற்போது காணப்படுகிறது.

நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர , தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்று அதன் ஊடாக பணத்தைப் பெற்று உணவு உண்ண வேண்டும் என்பதை ஊக்குவிக்கக் கூடாது. ஆனால், இந்த அரசாங்கம் அதனையே செய்து கொண்டிருக்கிறது. தற்போதைய ஆட்சியாளர்களுக்கு மாத்திரமின்றி சகலருக்கும் இது பொருந்தும்.

இந்த நிலைமையை மாற்றியமைக்காவிட்டால் இனிவரும் காலங்களில் முற்று முழுதாக ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நாடாக இலங்கை மாற்றமடைந்துவிடும் - என்றார். (ஐ)

# செவ்வாயின் பாறைகளை ஒத்த கற்பாறைகள் இலங்கையில்!

## நாசா விஞ்ஞானிகள் குழு இலங்கை வந்தது

கொழும்பு, ஜூலை 04

நாசா விஞ்ஞானிகள் குழுவொன்று கற்பாறைகள் தொடர்பான ஆய்வுக்காக இலங்கை வந்துள்ளது.

நாசாவின் மூத்த விஞ்ஞானி சுனிதி கருணாதிலக தலைமையிலான நிபுணர்கள் குழு இலங்கையில் உள்ள சில பாறை அமைப்புகளுக்கும் செவ்வாய் கிரகத்தில் காணப்படும் பாறை அமைப்புகளுக்கும் இடையிலான ஒற்றுமைகள் குறித்து ஆராய்வதற்காக தற்போது இலங்கைக்கு வந்துள்ளது.

இலங்கையில் நாசா விஞ்ஞானிகள் தமது ஆய்வுப் பயணத்தை முதலில் கினிகல்பலஸ்ஸ, இந்திகொலபெலஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து தென் மாகாணத்தில் உள்ள உஸ்ஸங்கொட பிரதேசத்துக்கு பயணிக்கவுள்ளனர். குறித்த பிரதேசங்கள் அவற்றின் தனித்துவமான புவியியல் அம்சங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதோடு, அவை ஆய்வுக் குழுவின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளன.

புவியியல் மற்றும் வானியல் துறைகளை இணைக்கும் இந்த ஆய்வானது, பூமிக்குரிய பாறைகள் மற்றும் தொலைதூர செவ்வாய் கிரகத்தில் உள்ள பாறைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளை வெளிப்படுத்தும் திறனை கொண்டுள்ளது.

இத்தகைய கண்டுபிடிப்புகள் பிரபஞ்சத்தைப் பற்றிய எமது அறிவை விரிவுபடுத்தும் என்பதில் சந்தேகமில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வரி செலுத்தாத வாகனங்களுக்கு சலுகை வழங்குவதற்கு தீர்மானம்!

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

கொழும்பு, ஜூலை 04

பல வருடங்களாக வாகன வருமான வரிப்பத்திரம் பெறாமல் - பயன்படுத்தப்படாமல் இருக்கும் பழைய வாகனங்களுக்கு சலுகை அடிப்படையில் வாகன வருமான வரிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதுபோன்ற, வாகனங்களின் மீள் பதிவுக்காக பெருந்தொகை அபராதம் விதிக்கப்படுவதனால், இவை பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நிஷாந்த அனுருத்த வீரசிங்க சுட்டிக்காட்டினார்.

எனவே, இதுபோன்ற வாகனங்களின் வாகன வருமான வரிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள சலுகை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# புத்தூர் தாக்குதல் சம்பவம் மேலும் மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 04

புத்தூரில் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை தாக்கியதுடன் சொத்துக்களையும் சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 34 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெண்களின் படத்தை கணினி வரைகலை மூலம் ஆபாசமாக சித்திரித்து வெளியிட்டனர் என்றுகூறி புத்தூரில் இரு இளைஞர்களின் வீட்டுக்குள் நுழைந்தவர்கள் தாக்குதல் நடத்தினர்.

கடந்த 28ஆம் திகதி நடந்த இந்தத் தாக்குதலில் இரு இளைஞர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார் 25 பெண்கள் உட்பட 31 பேரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். 25 பெண்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், 6 பேரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில், நேற்று திங்கட்கிழமை மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதானவர்கள் நீர்வேலி - மடத்தடியை சேர்ந்த 20, 25, மற்றும் 28 வயதுடைய நபர்களாவர். (ஐ)

# கடன் மறுசீரமைப்பு சட்டமூலம் பலவந்தமாக நிறைவேற்றப்பட்டது

## இப்படி சொல்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூலை 04

அரசாங்கம் பலவந்தமாகவே தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலத்தை நிறைவேற்றியுள்ளது. இரவு 9 மணிக்கு பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், 7.30 மணிக்கே வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் காரணமாகவே எதிர்க்கட்சியின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் காணப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலம் பலவந்தமாகவே நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. காரணம் முழுமையான விவாதம் நிறைவடைந்த பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் ஆரம்பத்தில் அறிவித்திருந்தார்.

ஆனால், திடீரென 7.30 மணியளவில் சகல விவாதங்களை நிறுத்தி வாக்கெடுப்புக்கு செல்வதாக அறிவித்தார். இதனால் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

தேசிய கடன் மறுசீரமைப்பால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12 ட்ரில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் மீது இவ்வாறு பெரும் சுமையை சுமத்தியிருப்பது பெரும் தவறாகும். சர்வதேசத்திடம் கடன் பெற்று தமது ஆட்சியை மேலும் சில ஆண்டுகளுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையையே அரசாங்கம் இதன் மூலம் எடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இது தொடர்பில் எந்தவொரு நிபந்தனையும் இல்லை. இதன் மூலம் அரசாங்கம் பலவந்தமாகவே தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது - என்றார். (ஐ)

# சுயபடம் எடுக்க முயன்ற யுவதி ஆற்றில் விழுந்து மாயமானார்!

கொழும்பு, ஜூலை 04

அத்தனகலு ஓயாவில் நீராடச் சென்ற 20 வயது யுவதி ஒருவர் கைபேசியில் சுயபடம் எடுக்க முயன்ற போது வழுக்கி நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று நிட்டம்புவை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காணாமல் போன யுவதி, கொழும்பு குணசிங்கபுர அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த 20 வயதுடைய பாத்திமா பஸ்னா எனவும், அவர் புறக்கோட்டையில் உள்ள பாடசாலை ஒன்றில் தொண்டர் ஆசிரியையாக பணியாற்றுகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குணசிங்கபுரவில் வசிக்கும் உறவினர்களான ஒரு குழுவினர் நேற்று பிற்பகல் திஹாரியவில் உள்ள உறவினர் வீடொன்றுக்கு வந்துள்ளார். யுவதி உட்பட 7 பேர் அத்தனகலு ஓயாவில் நீராடச் சென்ற நிலையில் குறித்த சுயபடம் எடுத்துக்கொண்டிருந்த யுவதி பாறையில் இருந்து தவறி விழுந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தனக்கு நீச்சல் தெரியாது என்று கூறி உதவி கோரி அலறியபோதே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று பிற்பகல் வரை பொலிசார் அப்பகுதி மக்களுடன் இணைந்து யுவதியை தேடிய போதும், பலன் கிட்டவில்லை.

கடற்படை குழுவை வரவழைத்து யுவதியை தேடும் பணியை தொடர்வதாக நிட்டம்புவை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை பணிப்பாளராக டகாபுமி!



கொழும்பு, ஜூலை 04

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராக டகாபுமி கடொனோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராகப் பணியாற்றிய சென் செனின் பதவிக்காலம் கடந்த ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்நிலையில், அந்தப் பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள டகாஃபுமி கடொனோ, “சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புகளை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும்.

இதேவேளை அந்த ஒத்துழைப்புகள் மூலம் இலங்கை மக்கள் பயனடைவது உறுதிப்படுத்தப்படும்“ என்ற தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடந்த 2006 ஆம் ஆண்டு இணைந்துகொண்ட டகாஃபுமி கடொனோ, மேற்கு, தென்கிழக்காசிய மற்றும் மத்திய பிராந்தியங்களிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் கிளை பணிமனைகளில் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.